# தமிழரசு

1-8-1976 50காசு.





வளமான
வாழ்விற்கு....
நாடு நலம் பெற
வீடு வளம் பெற
அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.
திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்
அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!
பிறந்ததைக் காப்போம்!
பிறப்பதைத் தவிர்ப்போம்!!
சாமி
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.



# "வறட்சியை வென்றிட வகை வகையாய் உதவி செய்வீர்!"

— ஆளுநர் வேண்டுகோள்

'தொடர்ந்து இரண்டாண்டுகளாக வடகிழக்குப் பருவ மழை பொய்த்து விட்டதன் காரணமாக, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் கடும் வறட்சி நிலைமை இருந்து வருவதை அனைவரும் அறிவீர்கள். மொத்தம் 4,131 கிராமங்களும் 10,000 சிற்றூர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமான மழைப் பிடிப்புப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழை வெகுவாகப் பொய்த்துவிட்டது. இதனால், தென்மேற்குப் பருவ மழையினால் நிலைமை ஓரளவுக்குச் சீர்திருந்தலாம் என்ற நம்பிக்கையும் குறைந்துவிட்டது.

பாதிக்கப்பட்ட இந்த மாவட்டங்கள் அனைத்திலுமே பெரும் அளவில் வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிதண்ணீர் வழங்குவதற்கு முதலிடம் தரப்பட்டு, மொத்தம் ரூ. 8.5 கோடி செலவில் குடிதண்ணீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஒரு லட்சம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய வகையில், வேலை வாய்ப்புத் திட்டங்கள் முழு வேகத்துடன் நடக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிலைமை முழுதும் கட்டுக்கடங்கியே இருக்கிறது என்று பொதுமக்கள் உறுதியாக நம்பலாம்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், பொது மக்களையும், குறிப்பாக, சமூக நல ஊழியர்களையும் பொது நல நிறுவனங்களையும், பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்க, தாங்களே முன்வந்து தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் அளித்திட வேண்டுமென விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அளிக்கும் உதவி பல்வேறு முறைகளில் அமையலாம். குடிதண்ணீர் வசதிக்காக கிராமங்களையோ சிற்றூர்களையோ ஏற்கலாம். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துக்கு, ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், உள்ள குழாய்க் கிணறுகளை மேலும் ஆழப்படுத்தவும் வேண்டிய கருவிகள் வழங்கலாம். பாதிக்கப்பட்ட நகராட்சிகளுக்கும் இதே போல் குடிதண்ணீர் வழங்க லாரிகள் வழங்கலாம். இது போன்ற உதவிகளைத் தவிர, கால்நடைகளுக்கு வேண்டிய தீவனங்கள், குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் வரவேற்கப்படுகின்றன.


வறட்சி நிவாரணத் திட்டங்களில் அரசுக்கு உதவ விரும்பும் நிறுவனங்கள் சென்னையில் உள்ள வருவாய்த் துறைச் செயலாளருடனோ, அல்லது பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடனோ தொடர்பு கொள்ளலாம்.

வறட்சி நிவாரணப் பகுதிகளில், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் பணியில் அரசுடன் ஒத்துழைத்து தங்களாலான எல்லா உதவிகளையும் பொது நல நிறுவனத்தினர் அளிப்பார்கள் என உறுதியாக நம்புகிறேன்.

மலர் : 7
இதழ் : 3
தமிழரசு
1—8—1976

33%

# ‘தமிழ்நாட்டில் பசுமை வளம் கொழிக்கச் செய்வீர்!’



நமது பொருளாதார வளர்ச்சியில் மரங்கள் மிக இன்றியமையாதவை. கட்டிட மரம், விறகு, பழங்கள் மற்றும் பல்வேறு இன்றிமையாத பொருட்களை அவை அளிப்பதுடன் நில்லாமல் சுற்றுப்புறத் தூய்மை கெடுவதையும் தடுக்கின்றன. நமதுநாட்டில் காடுகள் மிகவும் குறைவாகவே உள்ளன. நாட்டின் பரப்பளவில் 23 சதவிதம் மட்டுமே காடாக உள்ளது. அதிலும், தமிழ்நாட்டில் 17 சத வீதத்தில் தான் காடுகள் அமைந்துள்ளன.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக மரம் நடும் விழா ஆண்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் அதன் காரணமாக நாம் எதிர்பார்த்த அளவு வெற்றி பெறவில்லை. நமது நாட்டில் மரங்கள் வெட்டப்படுவது குறித்து நமது அன்பிற்குரிய தலைவர் நேருஜி அவர்கள் பன்முறை வருத்தம் தெரிவித்தார். “மரத்தை வெட்டுவது எளிது. ஆனால், அதை வளர்ப்பதற்கோ ஒரு தலைமுறை ஆகிறது” என்று அவர் குறிப்பாகச் சொல்லியுள்ளார். எனவே, மரங்களை வளர்த்து அவற்றைப் பாதுகாப்பதற்கான தீவிர இயக்கம் ஒன்று தொடங்கப்பட வேண்டும்.

ஆண்கள், பெண்கள், இளைஞர், முதியோர் ஈருகவுள்ள ஒவ்வொரு குடிமகனும் நமது நாடு வளமானதொரு நாடாக உருவாக வேண்டும் என்றுதான் விரும்புவார். எனவே, மனஉறுதியுடனும், கட்டுப்பாட்டுடனும் முயற்சிகளை மேற்கொண்டால் காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளில் கணிசமான பரப்பளவில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் மீண்டும் காடுகளை வளர்க்க இயலும்.

தமிழ்நாட்டில் 51,849 ஹெக்டேர் ஊராட்சி நிலங்களிலும் பயன்படுத்தப்படாமல் உள்ள பிற அரசு தரிசு நிலங்களிலும் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. மேலும், பெரும்பாலும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள கால்வாய், ஆற்றங்கரைகள் நெடுக 10,535 ஹெக்டேர்களில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டால் போதுமெனக் கருதி வாளாயிராமல் நாட்டின் ஏற்றமிகு இத்திட்டத்தில் பொதுநிறுவனங்களும், உள்ளாட்சி மன்றங்களும் பங்கு கொள்ள வேண்டும்.

செடிப்பண்ணைகளை ஏற்படுத்திப் பொதுமக்களுக்கு இளஞ்செடிகளை வழங்குவதற்கு மாநகராட்சிகளும், நகராட்சிகளும் தற்போது சில வசதிகளைப் பெற்றிருக்க

லாம்., இவ்வசதிகள் தற்போது இல்லையெனில் செடிப் பண்ணைகள் தொடங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை நயந்து கேட்டுக் கொள்ள வெண்டியதுடன் நகர்ப்புறங் களில் செயல்படுத்தப்படும் மர வளர்ப்புப் பணிகளில் பெரும ளவிற்கு அவற்றை ஈடுபடுத்தவும் வேண்டும். மர வளர்ப்புப் பணியில் எற்கெனவே ஈடுபட்டுள்ள வேளாண்மை தோட்டக்கலைச் சங்கம் போன்ற பிற நிறுவனங்களையும், இதில் பங்கேற்குமாறு செய்ய வேண்டும். இதைத் தவிர வனத்துறையும், வேளாண்மைத்துறையும் மாநகரங்களிலும், பெரிய பட்டணங்களிலும் செடிப்பண்ணைகளைத் தோற்று விக்க முடியும். அழகிய மலர்கள் அல்லது பெரிய கண்கவர் வடிவுடைய உச்சிப் பகுதிகளுடைய மரச் செடிகளை வளர்ப் பதில் வனத்துறை அக்கறை காட்டலாம். வேளாண்மைத் துறை, மா, கொய்யா, எலுமிச்சை போன்ற பழமரங்களை வளர்ப்பதில் கவனம் செலுத்தலாம். நிலப்பரப்பில் இயற்கை எழிலைக் கூட்டுவதற்காகவும், வெட்டுமரமாகவும், எரிபொரு ளாகவும் பிறவகைகளிலும் பயன்படுத்தப்படுவதற்காகவும் பல்வகை மரங்களை வளர்க்கலாம். அந்தந்த இடங்களின் மண்வளம், தட்ப, வெப்பநிலைகளுக்கு ஏற்ப மரவகைகள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். எனவே, ஏற்ற மரங்களை ஏற்ற இடங்களில் உரிய காலத்தில் நட்டு அறிவார்ந்த முறையில் அவற்றைப் போற்றி வளர்ப்பது அவசியம் ஆகும். மரங்களை வைத்து வளர்ப்பதால் கிராமப்புறங் களுக்கு வனப்பும், வண்ண எழிலும் ஏற்படும்.

இவ்வாண்டில் மரம் நடும் திட்டத்தைப் பெருமளவில் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக விரிவான திட்டம் ஒன்றை அரசு வகுத்துள்ளது. எனவே, இத்திட்டத்தை செவ் வனே செயற்படுத்துவதற்குத் தமிழ்நாட்டு மக்கள் தங்கு தடையின்றித் தங்கள் ஒத்துழைப்பை நல்குமாறும், புத்தார் வத்துடன் மரங்களை நட்டுப் பாதுகாத்துத் தமிழ்நாட்டில் பசுமை வளம் கொழியச் செய்யுமாறும் நான் அவர்களை மனப்பூர்வமாக வேண்டுகிறேன்.

—மோகன்லால் சுகாதியா

ஆளுநர், தமிழ்நாடு.



27–வது 'வனமகோத்சவ' விழாவை முன்னிட்டுத், தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள், கிண்டி ராஜ்பவன் தோட்டத்தில் 25-7-'76 அன்று ஒரு மாங்கன்றை நட்டார்.

# பொதுமக்களின் உரிமைகளும்

1. சட்டத்தில் எல்லாக் குற்றங்களும், கைது செய்தற்குரியவை, கைது செய்வதற்குரியதல்லாதவை என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.



2. கொலை, கொள்ளை, திருட்டு, மோசடி, தீ வைத்தல், கலகம், கொடுந்துன்பம், சூதாட்டம், விபச்சாரம், மது வகைக் குற்றங்கள், இலஞ்சம், கள்ளக் கடத்தல், பதுக்கல், தீண்டாமை முதலியன, கைது செய்வதற்குரிய குற்றங்களாகும் **(Cognizable Offences).**

3. அற்பத்துன்பம், குறும்புத்தனம், சிவில் விவகாரங்கள் முதலியன கைது செய்வதற்குரியதல்லாத குற்றங்களாகும் **(Non-cognizable offences)**.

4. எல்லா வகைக் குற்றங்களையும் தடுத்து, பொதுமக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாப்பது காவல் துறையினரின் தலையாய பொறுப்பாகும். கைது செய்வதன் மூலம், கைது செய்வதற்குரிய குற்றங்களைத் தடுப்பதற்கு, காவல் துறையினருக்கு அதிகாரமுண்டு.

5. வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, பெறப்படும் எல்லா வகைக் குற்றம் பற்றிய தகவல்களையும் காவல் நிலையத்தார் பதிவு செய்தாக வேண்டும்.

6. கைது செய்வதற்குரிய குற்றங்களைத்தான் காவல்துறையினருக்கு விசாரணை செய்ய அதிகாரமுண்டு. நீதிபதி **(Magistrate)** உத்தரவின்றி கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களை விசாரணை செய்ய அதிகாரம் கிடையாது.

7. கைது செய்தற்குரியதல்லாத குற்றத்தைப் பற்றி வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தகவல் பெற்றால் அதன் சுருக்கத்தை நிலைநாட்குறிப்பில் **(Station General Diary)** பதிவு செய்து, தகவல் கொடுப்பவரை நிவாரணம் பெற, நீதிமன்றத்திற்குச் செல்லும்படி காவல் நிலையத்தார் தெரிவிக்க வேண்டும்.

8. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவல், வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ காவல் நிலையத்தில் கொடுக்கலாம். வாய்மொழியாகக் கூறியதை எழுதிக் கொள்ள வேண்டும்; இவ்வாறு எழுதிக் கொண்ட அல்லது எழுத்தில் பெற்ற தகவல் மீது தகவல் கொடுப்பவருடைய கையொப்பம் பெற வேண்டும்.

9. கைது செய்தற்குரிய குற்றம் பற்றிய தகவலை முதல் தாக்கல் அறிக்கையில் **(F.I.R.)** பதிவு செய்து, அதன் பிரதியை உடனேயே தகவல் கொடுத்தவருக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டும்.

10 மேற்கூறிய சட்ட விதிகள் காவல் நிலையத்தாரால் மீறப்பட்டால் மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளருக்குப் பொதுமக்கள் தெரிவிக்க வேண்டும்.

11. புலன் விசாரணைக்காக சாட்சிகள் காவல் நிலையத்துக்கு அழைக்கப்படலாம். ஆனால் பெண்களும், குழந்தைகளும் அவர்கள் இருப்பிடத்திலேயே தான் விசாரிக்கப்பட வேண்டும்.

12. புலன் விசாரணைக்கு ஒரு தஸ்தாவேஜோ அல்லது பொருளோ, தேவைப்பட்டால், காவல் நிலையப் பொறுப்பிலுள்ளவர் எழுத்து மூலம் அதை ஆஜர் செய்ய உத்தரவிட வேண்டும்.

# காவல் துறையினரின் பொறுப்புகளும்



13. காவல் துறையினர் தேக பரிசோதனையில் பொருள் கைப்பற்றிஞல், பரிசோதனையிடப்பட்டவருக்கு, உடனே ரசீது வழங்க வேண்டும்.

14. காவல் துறையினர் எந்த இடத்தைச் சோதனையிட்டாலும், அந்த இடத்தின் பொறுப்பிலுள்ளவரை சோதனை நடக்கும் பொழுது இருக்க அனுமதி அளிப்பதுடன், சாட்சிகள் கையொப்பமிட்ட சோதனை ஜாபிதாவின் பிரதியை அவருக்கு வழங்க வேண்டும்.

15. கைது செய்தற்குரிய குற்றத்தில் சம்பந்தப்பட்டவர், பிடி—ஆணையின்றி **(Without a Warrant)** காவல்துறையினரால் கைது செய்யப்படலாம். பிடி-ஆணையின்பேரில் கைது செய்யப்பட்டவருக்கு பிடி—ஆணையைக் காட்ட வேண்டும்.


16. கைது செய்யப்பட்டவருக்கு கைது செய்வதின் காரணங்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். ஜாமீனில் விடக் கூடிய குற்றங்களில், அதன் தன்மையைத் தெரிவித்து, தகுந்த ஜாமீன் வந்தவுடன் கைது செய்யப்பட்டவரை விட்டுவிட வேண்டும்.

17. கூடியமட்டில் பெண்களும், குழந்தைகளும் காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்படக் கூடாது என்பது விதி.

18. நீதிபதி **(Magistrate)** முன்னிலையில் ஆஜர் செய்யாமல் எந்த ஒரு கைதியையும், **24** மணி நேரத்திற்கு மேல் காவலில் வைக்கக் கூடாது.

19. புலன் விசாரணை முடிந்தவுடன், அதன் முடிவைப் புகார் செய்தவருக்கு எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும்.

20 கைதிகள் தப்பி ஓடுதலைத் தவிர்த்தல், தலைமறைவான கைதிகளைப் பிடித்தல், பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படுவதைத் தடுத்தல், பொதுச் சொத்துக்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாத்தல், கைது செய்தற்குரிய குற்றம் புரிவோரைப் பற்றித் தகவல் அளித்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் காவல் துறையினருக்குப் பொது மக்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும்.



21. ஜாமீனில் விடக்கூடாததும், கைது செய்தற்குரியதுமான குற்றத்தைத் தன் முன்னிலையில் புரிவோரைக் கைது செய்வதற்கு, பொதுமக்களுக்கு அதிகாரம் உண்டு.

22. நிலம், வாய்க்கால, வரப்பு, கட்டடம், சந்தை, மீன் பிடிப்பு, பயிர் போன்றவைகளின் உடைமை, உரிமை பற்றிய சர்ச்சைகளில் காவல் துறையினருக்குத் தலையிட அதிாரம் கிடையாது. இதுபோன்ற விவகாரங்களில், பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில்தான் நிவாரணம் தேட வேண்டும்.

தமிழ்நாடு காவல்துறை

# பாரத நாட்டில் சாதனைகள் நிறைந்த ஓராண்டு!



—சங்கர் கோஷ்,
மத்திய திட்ட ராஜாங்க அமைச்சர்.

இந்திய வரலாற்றில் 1975 ஜூன் முதல் 1976 ஜூன் வரையிலான காலம் நினைவு கூரத்தக்க காலமாகும். இந்தக் காலத்தில் பிரதம மந்திரி **திருமதி இந்திரா காந்தி அவர்கள்** அறிவித்த **20-அம்சப் பொருளாதாரத் திட்டம்** தேசத்தின் பொருளாதாரத்துக்குப் புதிய ஊக்கமும், பொலிவும் அளித்ததோடு மட்டுமல்லாமல், சமூக-பொருளாதாரம், அரசியல் மற்றும் பல துறைகளிலும் பல்வேறு பலன்களை அளித்துள்ளது. பொருளாதாரத்தில் வலிமைபெற்ற நாடாக இந்தியா எழுச்சி பெற்றுள்ளது. மாபெரும் அரசியல் ஸ்திரத்தன்மையும் அடையப்பட்டுள்ளது. வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் ஒழுங்கு, கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதிக சமூக நீதியுடன் வளர்ச்சி வேகத்தை துரிதப்படுத்துவதே 20-அம்சப் பொருளாதார திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி, முன்னுரிமைப் பகுதிகள் குறிப்பிடப்பட்டு, அங்கு முற்போக்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திட்டம், வழக்கமான திட்டச் செயல் முறைக்கு துணைத்திட்டமாக விளங்குகிறது.

இருபது அம்சத் திட்டத்தின் பல அம்சங்கள் மாநிலத்துறையைச் சேர்ந்தவை. அவற்றில் சிலவற்றுக்கு அதிக நிதி உதவியும் தேவைப்படவில்லை; ஆனால் சட்ட, நிர்வாக நடவடிக்கை மட்டுமே தேவைப்படுகிறது. இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஏராளமான சட்டமன்ற நடவடிக்கைகளை முன்பே எடுத்துள்ளன.

புதிய பொருளாதாரத் திட்டம், நெருக்கடிநிலை ஆகியவற்றின் வியக்கத்தக்க பலன்களில் பணவீக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கிடைத்த வெற்றியும் ஒன்றாகும். பணவீக்கப்போக்கு வெற்றிகரமாக தடுத்துத் திசை திருப்பப்பட்டதோடுகூட, அது இறங்கு முகத்தைக் காட்டியுள்ளது. **பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திய ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது.**

விவசாயத்துறை, தொழில்துறை ஆகிய இரண்டிலும் உற்பத்தி வேகம் கணிசமாக உயர்ந்துள்ளது. மேலும் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும், உற்பத்தித் திறனவை நன்கு பயன்படுத்திக் கொள்வதற்கும் தொழில்துறை கொள்கைகளும், செயல்முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டும் தளர்த்தப்பட்டும் உள்ளன.

தொழில்துறையில் குறிப்பிடத்தக்க உற்பத்தி உயர்வு அடையப்பட்டுள்ளது. 1974-75-ல் 2.5 சதவிகிதமாக இருந்த தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், 1975-76-ல் 5.9 சதவிகித அளவுக்கு உயர்ந்துவிட்டது. 1975-76-ன் கடைசி காலாண்டின் வளர்ச்சி விகிதம், முந்தைய ஆண்டின் இதே காலத்தைவிட 10 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அரசுத்துறை நிறுவனங்களின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டுள்ளது, இந்த ஆண்டு தொழில்துறை வளர்ச்சியின் சிறப்பு அம்சமாகும். குறிப்பாக எஃகு, நிலக்கரி, இரும்பு அல்லாத உலோகங்கள், பெட்ரோலியப் பொருட்கள், இயந்திரக் கருவிகள், கனரக மின்சாதனங்கள் முதலியவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது. 1975 ஏப்ரல்-டிசம்பர் காலத்தில், தேசிய ஜவுளிக் கார்ப்பொரேஷன் ஆலைகள் நீங்கலாக மற்ற அரசுத்துறை நிறுவனங்களின் சராசரி வளர்ச்சி வேகம், முந்தைய ஆண்டின் இதே காலத்தோடு ஒப்பிடுகையில் சுமார் 15 சதவிகிதமாக இருந்தது. தற்போதைய குறிப்புக்களின்படி, 1975-76-ல் மத்திய அரசுத்துறை நிறுவனங்களின் நிகர இலாபம் (வரிவிதிப்புக்கு முன்னால்) 350 கோடி ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1975-76-ஆம் ஆண்டில் எஃகு, நிலக்கரி, மின்சக்தி ஆகியவற்றின் உற்பத்தியில் சாதனை ஏற்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் முதல் காலாண்டிலும் இந்த உற்பத்தி உயர்வின் வேகம் தொடர்ந்து பராமரிக்கப்பட்டது.

1975-76-ல் உணவு தானியங்களின் உற்பத்திக்குறியளவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த 11.4 கோடி டன்னுக்குப் பதில் 11.6 கோடி டன் உணவுதானியங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. உணவு உற்பத்தி கணிசமாக உயர்ந்ததன் பலனாக மற்ற பண்டங்களின் விலைகளும் கடந்த ஓராண்டில் பொதுவாகக் குறைந்துள்ளன.

கடத்தல் தொழில் பெருமளவுக்கு ஒழிக்கப்பட்டுள்ளது. வெளிச்செலாவணி மோசடிக்காரர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 1,500 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை வெளிக்கொணர்வதில், வருமானம், சொத்து பற்றிய விவரங்களைத் தாமாகவே முன்வந்து அறிவிக்கும் திட்டம் வெற்றி அடைந்துள்ளது.

பரிசீலனை ஆண்டில், ஏழ்மையை முழுமையாகக் குழிதோண்டிப் புதைக்க நாட்டில் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 20-அம்சப் பொருளாதாரத் திட்ட நிறைவேற்றத்தின் முன்னேற்றத்தை கீழ்க்கண்டவாறு சுருக்கமாகக் கூறலாம்:




*1. இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்; இன்றியமையாப் பண்டங்களின் விநியோக முறைகளை மாற்றியமைத்தல் முதலியன.*

அன்றாட வாழ்வுக்குத் தேவைப்படும் பல்வேறு இன்றியமையாப் பண்டங்களின் மொத்த விற்பனை விலைகளும், சில்லறை விற்பனை விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. 1975-76-ல் விவசாய உற்பத்தி கணிசமாக உயர்ந்ததனாலும், நெருக்கடி நிலைப் பிரகடனத்துக்குப் பிறகு ஏராளமான தீவிர, கடுமையான கொள்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதினாலும் இந்தச் சாதகமான விலை நிலைமை ஏற்பட்டுள்ளது. பணவீக்கப் போக்குக்கு எதிரான நடவடிக்கைகள் தவிர, கள்ள மார்க்கெட்காரர்கள், கொள்ளைலாபக்காரர்கள், கடத்தல்காரர்கள் முதலான பொருளாதார குற்றவாளிகளை முறியடிப்பது, பதுக்கலைக் கண்டு பிடிப்பதற்கானத் தீவிர இயக்கங்கள், கறுப்புப்பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் அவற்றில் அடங்கும். பொதுமக்களுக்கு இன்றியமையாப் பண்டங்களை விநியோகிக்கும் முறை பலப்படுத்தப்பட்டு, பரவலாக்கப்பட்டது. உணவு தானியக் கொள்முதலும் நிர்ணயிக்கப்பட்டிருந்த குறியளவைத் தாண்டியுள்ளது. சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் டன் உணவு தானியம் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

## அட்டை சொல்லும் செய்தி

*நூற்றி இருபது ஆண்டுகளை அணுகிக் கொண்டிருக்கும் சென்னைப் பல்கலைக் கழகம், இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய பல்கலைக் கழகங்களில் ஒன்று. 1857-ல் துவக்கப் பெற்ற இந்தப் பல்கலைக் கழகம் இலட்சக் கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய பெருமை படைத்ததாகும். புதிய புதிய துறைகளில் எல்லாம் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களைத் தொடங்கியிருக்கும் இந்தப் பல்கலைக் கழகத்தின் புகழ், நாள் தோறும் ஓங்கி வருகிறது. எதிர்காலத்தில் இன்னும் புகழ் பெறுவது உறுதி!*

நிதி பற்றுக்குறை அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலமும், கடன்திட்டக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமும் பணப் புழக்கத்தின் வளர்ச்சிப் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தொழில்துறையில் கணிசமான உற்பத்தி உயர்வு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள் அனைத்தும் உற்பத்திச் சாதனை புரிந்துள்ளன. தெரிந்தெடுக்கப்பட்ட அரசுத்துறை நிறுவனங்களின் உற்பத்தித் திறன் உபயோகத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு எய்தப்பட்டுள்ளது.

*2. விவசாய நில உச்சவரம்பு*


மாநிலங்களின் நில உச்சவரம்புச் சட்டங்கள் தேசிய வழிமுறைகளுக்கு ஏற்ப திருத்தியமைக்கப்பட்டுள்ளன; அல்லது புதிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்த மாநிலச் சட்டங்களில் பெரும்பாலானவை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 9-வது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இதுவரையில் சுமார் 13 இலட்சம் நில அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 7



இலட்சம் அறிக்கைகள் பைசல் செய்யப்பட்டுள்ளன. பைசல் செய்யப்பட்ட அறிக்கைகளின்படி, 18 இலட்சம் ஏக்கர் நிலங்கள் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுமார் 10 இலட்சம் ஏக்கர் நிலத்தை மாநிலங்கள் இதுவரையில் எடுத்துக்கொண்டுள்ளன. அந்நிலங்களில் 4 இலட்சம் ஏக்கருக்கும் மேல் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டு விட்டது. மாநில முதலமைச்சர்களின் மாநாடு நிலச்சீர்திருத்த நிறைவேற்றத்தின் முன்னேற்றத்தைப் பரிசீலித்து, அவற்றைத் துரிதப் படுத்துவதற்குப் பல்வேறு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்துள்ளது. அப்பரிந்துரைகளின் அடிப்படையில் மாநில அரசாங்கங்கள் சரியான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

### 3. நிலமற்றவர்களுக்கும், நலிந்தவர்களுக்கும் வீட்டுமனை வழங்குதல்.

நிலமற்றவர்களுக்கும் நலிந்த பிரிவினர்களுக்கும் வீட்டுமனைகள் வழங்குவது சம்பந்தப்பட்ட வேலை அநேக மாநிலங்களில் கணிசமாக முடிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 65 இலட்சம் வீட்டுமனைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கேரளம், கர்னடகம், தமிழ்நாடு, மத்தியப் பிரதேஷ், மஹாராஷ்டிரா, ஆந்திரப் பிரதேஷ், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம் ஆகிய சில மாநிலங்களில் நிலமற்றவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைகளில் வீடுகள் கட்டுவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; வீட்டுமனைகள் வழங்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான நிதி உதவிகளும் சில மாநிலங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன.



### 4. அடிமை ஊழிய முறை ஒழிப்பு.

அடிமை ஊழிய முறையை ஒழிப்பதற்கு சட்டம் ஒன்று ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ்படும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும், அவர்கள் மீது வழக்கு தொடருவதற்கும் மாவட்ட அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாநில அரசாங்கங்கள் எடுத்துள்ளன. அடிமை ஊழியமுறை ஒழிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக அநேக மாநிலங்களில், கிராமக் குழுக்கள் செயல்படுகின்றன. இதுவரையில் சுமார் 58,400 அடிமை ஊழியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். விடுவிக்கப்பட்ட அடிமை ஊழியர்களின் மறுவாழ்வுக்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றும்படி மாநிலங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### 5. கிராமப்புறக் கடன் தொல்லை.


கிராமப்புறத்தில் மக்களின் கடன்பட்டத் தன்மையை ஒழிப்பதற்காக பல்வேறு மாநிலங்கள் பல நடவடிக்கைகளை எடுத்துள்



ளன. அந்நடவடிக்கைகளில், நிலமற்றத் தொழிலாளர்களும், சிறிய-மிகச்சிறிய விவசாயிகளும், கிராமப்புற கைவினைஞர்களும் தனிப்பட்ட பணலேவாதேவிக்காரர்களிடம் வாங்கிய கடன்களை காலந்தாழ்த்தி திருப்பிக் கொடுப்பதற்கான சட்டப்பூர்வ அனுமதி வழங்கப்பட்டதும் ஒன்றாகும். அவற்றைத் தொடர்ந்து, பழைய கடன்கள் தீர்க்கப்படுவதற்கும், குறைக்கப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் அளிப்பதற்கு கூட்டுறவு நிறுவனங்கள் ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. சில மாநிலங்களில், நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குவதற்காக குறிப்பிட்ட சதவிகித அளவு நிதி ஒதுக்கும்படியும் அந்த நிறுவனங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஏராளமான இடங்களில் கிராமப்புற பாங்குகளும் நிறுவப்பட்டுள்ளன.

( தொடரும். )



# கிராமங்களில் தொலைக்காட்சி

"தொலைக் காட்சி நாட்டு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம், அதற்குள்ள சக்தி அளவிட முடியாதது. எனவே, செய்திகளைப் பரப்புவதற்கு மட்டுமின்றி, அறிவை வளர்க்கவும், தொலைக்காட்சி நன்கு பயன்படுத்தப்பட வேண்டும். தொலைக் காட்சியைக் கண்டு களிப்போரும், தொலைக் காட்சி நிலையத்தினரும் ஒருவருக்கொருவர் இணைந்து நின்று, தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த இணைப்பு இல்லையென்றால், இருதரப்பினருக்கும் முழுப் பயன் ஏற்படாது. தொலைக் காட்சி வரலாற்றில் பதினேழு ஆண்டுக்காலமாக நடைபெற்ற சோதனைகளும், உருவான படைப்புகளும், வளர்ந்த எண்ணங்களும் மேலும் சிறந்த முறையில் இப்போது மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு இத்தகைய சிறந்த சக்தி வாய்ந்த சாதனமான தொலைக் காட்சியை வழங்கியதற்காக மத்திய அரசிற்குத் தமிழ்நாட்டு மக்களின் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்று ஆளுநர் ஆலோசகர் திரு பி. கே. தவே, அவர்கள் 4-7-'76 அன்று முற்பகலில் சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் நடைபெற்ற புதிய ஒளிபரப்பு கோபுரத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

சென்னை நகரத் தொலைக் காட்சி நிலையம் முதன்முதலாக 1975-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. வி.சி. சுக்லா அவர்களால் துவக்கி வைக்கப் பட்டது. சென்னை தொலைக் காட்சி நிலையம் தொடங்கும் பொழுது 1 கிலோ வாட் சக்தியை உடைய அதன் ஒளிபரப்பு ஆற்றல் ஏறத்தாழ 19 கிலோ மீட்டர் சுற்றுப்பரப்பிற்கே பயன்பட்டது. தற்பொழுது 175 மீட்டர் உயரமும், 10 கிலோ வாட் சக்தியையும் கொண்ட ஒலி-ஒளிபரப்புக் கோபுரம், 4-7-'76 முற்பகலிலிருந்து தனது பணியைத் தொடங்கிவிட்டது. அதன் ஒலி-ஒளிக்கதிர்கள் 90 கிலோ மீட்டர் சுற்றுப்பரப்பிற்குப் பரவக் கூடிய ஆற்றலைக் கொண்டது.

இந்த விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்று உரையாற்றிய திரு பி.வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (அகில இந்திய தொலைக் காட்சித்தலைமை இயக்குநர்)1959 முதல் இந்திய நாட்டில் குறிப்பாக டில்லியிலும், பம்பாயிலும் தோன்றிய தொலைக்காட்சி ஏற்பாடுகளை நினைவு கூர்ந்தார். 1975-ஆம் ஆண்டு சென்னையிலும் கல்கத்தாவிலும், லக்னோவிலும் தொலைக்காட்சி நிலையங்கள் தொடங்கின. மேலும் செயற்கைக்கோள் வாயிலாக, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் தொலைக்காட்சியின் பயன் மக்களுக்குக் கிடைக்க வழி பிறந்தது. இவ்வாறாக சென்ற ஆண்டு நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஊக்கமூட்டி உற்சாகமளித்த பெருமை, இன்றைய விழாவின் தலைவரான துணை அமைச்சரைச் சாரும் என்று அவர் குறிப்பிட்டார்.

இப்புதிய ஒலி-ஒளிக் கோபுரத்தை 'மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்புத் துணை அமைச்சர் திரு தர்ம் வீர் சின்ஹா அவர்கள் இயக்கி வைத்து உரையாற்றும்போது, சென்னையைச்

**சி. வேங்கடசாமி, எம்.ஏ.,**
**மக்கள் தொடர்பு அலுவலர்**
**மற்றும் மாநில தொலைக்காட்சி**
**இணைப்பாளர்,**
**ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை.**

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# கறுப்புப் பண வேட்டை தொடரும்!


- கடத்தல்காரர்களின் ரகசிய சாம்ராஜ்யம் தகர்த்தெறியப்பட்டது. கடத்தல் மன்னர்கள் என்று கருதப்பட்டவர்கள் யாவரும் கம்பி எண்ணுகின்றனர். தலைமறைவாய்த் திரியும் 42 கடத்தல் புள்ளிகளின் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன.

- நகர்ப்புற காலி மனைகட்கு உச்ச வரம்பு. இந்த உச்சவரம்புக்குட்பட்ட சொத்துகள் பரிவர்த்தனைக்குத் தடை.

- குடியிருப்பு மனைகளுக்கு உச்ச வரம்பு. வரி ஏய்ப்பு செய்வோரைச் சிறையிலிட ஆடம்பர வீடுகளின் மதிப்பு மறுபரிசீலனை. வரி ஏய்ப்பு திடீர் சோதனைகளைத் தொடர்ந்து, 1975 ஜூலையிலிருந்து மட்டும் நேர்முக வரி வசூல் மூலம் 27.4 சதவிகிதம் கூடுதல்.

- "வாலண்டரி டிஸ்குலோஷர்" திட்டத்தின் கீழ் 2,50,000 பேர் ரூ. 15,870 மில்லியன் வருமானம், சொத்து போன்றவற்றை அறிவித்துள்ளனர். இதிலிருந்து வரியாக ரூ. 2,490 மில்லியன் கிடைத்துள்ளது.

davp 76 90



சுற்றியுள்ள 12,000 சதுர கிலோ மீட்டர் பரப்பிலுள்ள 2,100 கிராமங்களிலும், சிறு நகரங்களிலுமுள்ள 61 இலட்சம் மக்கள் இனி தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளைக் காண இயலும். நமது நாட்டில் தொலைக் காட்சியின் முக்கியக் குறிக்கோள் சமுதாயத்தை நவீன மயமாக்குவதும், சமூகப் பொருளாதார ஒற்றுமையை அடைவதுமே; மேலும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்னும் தடங்கலாக இருக்கும் இனம், பிரிவு வேறுபாடுகளை அறவே ஒழித்து நம்நாடு துரிதமாக ஒற்றுமையுடன் முன்னேறுவதற்குத் தொலைக் காட்சி பெரிதும் துணை புரியும் என்றார்.

* * * *

தொலைக் காட்சியின் ஆற்றல் மிகுந்த பயன்களை, கிராம மக்களும் பகிர்ந்து நற்பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு ''ஊரகத் தொலைக் காட்சி''க் குழு ஒன்றினை அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை தொலைக்காட்சி நிலைய இயக்குநர், தொலைக்காட்சி நிலையத் தலைமைப் பொறியாளர் முதலியோர் ஒத்துழைப்புடன், பல்வேறு துறையினரின் ஒருங்கிணைப்புடன் ஒலி-ஒளிபரப்புப்பணி திறம்பட நடைபெறுகிறது. சமுதாயத் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பராமரிக்க 41 வானொலி மேற்பார்வையாளர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.

**கிராமங்களில் மந்திரப் பெட்டி!**

அண்மையில், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திற்கு மத்திய அரசின் தகவல் ஒலிபரப்பு அமைச்சரகம், 114 தொலைக்காட்சிப் பெட்டிகளை, குறிப்பாக கிராமப்புறங்களில் நிறுவுதற்கு, நன்கொடையாக அளித்துள்ளது.

மத்திய அரசின் தகவல் ஒலி பரப்பு துணை அமைச்சர் திரு தர்ம் வீர் சின்ஹா அவர்கள், மத்திய அரசு நன்கொடையாக அளித்த தொலைக்காட்சிப் பெட்டியை முதன் முதலாக சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரக்காடு கிராமத்தில் 4-7-'76 அன்று மாலை 6-30 மணிக்கு இயக்கி வைத்து, அதை ஊராட்சி ஒன்றியத் தலைவரிடம் அளித்தார்.

தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கி வைத்துப் பேசிய அமைச்சர் அவர்கள் ''நம்நாட்டில் ஒற்றுமையை உருவாக்கி, வளத்தைப் பெருக்குவதற்கு உதவும், ஒரு சக்திமிகுந்த பெட்டியே இந்த தொலைக் காட்சிப் பெட்டியாகும். எனவே, இதை மந்திரசக்தி வாய்ந்த பெட்டி, (Magic Box) என்று கூறுவேன். நம் நாட்டின் பல பகுதிகளில் வாழும் மக்கள் ஒருங்கிணைந்து, அவர்களின் எண்ணங்கள், இலட்சியங்கள், அபிலாஷைகள், ஆற்றல் முதலியனவற்றை ஒருங்கிணைத்து, நாம் அனைவரும் இந்தியர்கள், நம் நாடு இந்தியா என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை உருவாக்கும் பெட்டியே, இந்த மந்திரப் பெட்டி'' என்றார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் ''வேளாண்மைக்கு இப்பெட்டி பெரிதும் பயன்படும். அதிலும் சிறப்பாக விதைகள், உரம், பயிர்ப் பாதுகாப்பு, பூச்சி மருந்துகளை நல்ல முறையில், உரிய காலத்தில் பயன்படுத்திக் கொள்ள இத் தொலைக்காட்சி பெரிதும் உதவும்'' என்றார்.

வானொலியையும், தொலைக் காட்சியையும் ஒப்பிட்டுக் கூறும் போது அவர், ''வானொலியில் பேச்சை மட்டுமே கேட்கமுடியும்; ஆனால் தொலைக் காட்சியில். சொல் விளக்கங்களுடன், செயல் முறைகளையும் நேரில் கண்டு, அவற்றை நேரில் கிராமவாசிகள் செயலில் கொண்டு வர இப் பெட்டி உங்களுக்கு நாள்தோறும் பெருமளவில் பயன்படும். அதனால் நம் நாடு மேலும் பயனடையும்'' என்றார்.

**ஆடம்பரமல்ல, அவசியம்!**


விழாவின் தொடக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய சோழவரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு ஆர். ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள், தொலைக் காட்சிப் பெட்டியை ஓர் ஆடம்பரப் பொருளாகக் கருத முடியாது. சமுதாய முன்னேற்றத்திற்கு, குறிப்பாக, கிராம மக்களுக்கு மிகவும் தேவையான செய்தி விளக்கச் சாதனம் இது'' என்றார்.

ஊரக வளர்ச்சி இயக்குநரான திரு டி.வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ். அவர்கள், அமைச்சர் அவர்களின் ஆங்கில உரையினை கிராம வாசிகள் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் தமிழில் உணர்ச்சி ததும்ப மொழி பெயர்த்தார். இத்தகைய வரப்பிரசாதத்தை கிராம மக்களுக்கு அளித்த அரசிற்கு, கிராமவாசிகளின் சார்பாக, நன்றி கூறினார்.

அன்றைய மாலை கிராம நிகழ்ச்சியில், பொய்க்கால் குதிரை நடனமும். ''சொன்னாத் தான் தெரியுதுங்க'' என்ற தலைப்பில் திரைப்பட நடிகை மனோரமா அவர்கள் வழங்கிய குடும்பக் கட்டுப்பாட்டுச் சித்திரமும், ஒலி பரப்பப்பட்டதைக் கிராம மக்கள் கண்டு களித்தது கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. அதற்குப் பின்னர் ''ஸ்ரீ வள்ளி'' திரைப்படம் தொடர்ந்து ஒளி பரப்பப்பட்டது.

விழாவிற்கு முன்னரும், பின்னரும் பெய்த பெருமழையை வேளாண்மை வீரர்களின் எதிர்கால நல்வாழ்வைக் குறிக்கும் மங்களகரமான அறிகுறி, என மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திடையே துணை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

# சத்துணவில் மீன்!



மீன் ஒரு சுவையான, சத்து மிகுந்த, எளிதில் செரிக்கக்கூடிய, உயர்தர புரதமும், கனிமங்களும் அடங்கிய உணவாகும். ஆகவே இது வளரும் சிறார்களுக்கும், முதியோர்களுக்கும் மிகத் தேவையானதாகும். நமது உணவில் போதுமான அளவு அமினோ அமிலங்களும், உயிர்ச் சத்துக்களும், கொழுப்புச் சத்துக்களும் அமைந்திராத குறையை, மீனை நமது அன்றாட உணவுடன் சேர்த்துக் கொள்வதால் போக்க முடியும். வேளாண்மை முன்னேற்றம் அதிக அளவில் இருந்தபோதிலும், மக்கள் பெருக்கத்தின் காரணத்தால், நமக்கு கிடைக்கின்ற உணவு பண்டத்திற்கும் நமது தேவைக்கும் உள்ள இடைவெளி அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இதனால் குறைந்த செலவில் உயர்தர உணவு உற்பத்தி செய்வதுமிகவும் தேவையான தொன்றாகும்.

இந்தியாவில் ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்குக் கிடைக்கின்ற மாமிசப் புரதத்தின் அளவு 6 கிராம் மட்டுமே. இது அமெரிக்காவில் ஒரு மனிதனுக்குக் கிடைப்பதில் பத்தில் ஒரு பங்கும், ஆஸ்திரேலியாவில் ஒரு மனிதனுக்கு கிடைப்பதில் பதினொன்றில் ஒரு பங்குமாகும். இந்தியாவில் ஒரு தனி மனிதனின் உணவில் அதிகமாக இடம் பெறுவது மாவுச் சத்து ஆகும். சம ஊட்டச் சத்துணவு பெற உயர்தர புரதமும், கொழுப்பும், கனிமங்களும் ஒருங்கே—தகுந்த அளவில்—அடங்கிய மீனை உணவில் சேர்த்தால் நலம் பயக்கும். புரதச் சத்து குழந்தைகளுக்கும், மகப் பேற்றினை எதிர் நோக்கியிருக்கும் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்க்கும் மிகத் தேவையான தொன்றாகும் என்பதில் ஐயமே இல்லை. சாதாரணமாக தேவைப்படுகின்ற புரதத்தைக் காட்டிலும், ஒரு மகப் பேற்றிற்கு, சராசரி ஒரு கிலோ கிராம் புரதம் அதிகமாகத் தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது மட்டுமல்ல, கடைசி இரு நிறை மாதங்களில் இதன் தேவை மிகவும் இன்றியமையாததாகும். ஒரு கிராம் பால் புரதத்தைப் பெற இரண்டு கிராம் உணவுப் புரதம் தேவைப்படுவதால், புரதச் சத்தடங்கிய உணவு பாலூட்டும் பெண்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று ஆகும்.

### மீன் தருவது தரம் உயர்ந்த புரதமே!

உடலின் திசு வளர்ச்சிக்குத் தேவையான அமினோஅமிலங்களை அதிக அளவில் மீன் புரதம் தன்னுள், கொண்டிருப்பதால், மீன் புரதம் இணையற்றதாகக் கருதப்படுகிறது. ஒரு மனிதனின் அன்றாடப் புரதத் தேவையில் பாதி அளவை, 250 கிராம் சாதாரண மீன் மூலம் பூர்த்தி செய்ய முடியும். மறுபாதி புரதத்தேவையை மற்ற உணவுப் பண்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். உயர்தர மீனுக்கும் சாதாரண மீனுக்கும் புரத அளவு வேறுபடினும், அமினோ அமில அமைப்பு மாறுபடாததால் தரம் குறைபடுவதில்லை.

அமினோ அமிலங்களில் இரு வகை உண்டு. முதல் வகை நாம் உண்ணும் உணவிலிருந்து பெற்றுக்கொள்பவை. இரண்டாம் வகை நமது உடல் தன்னுள்ளே தயாரித்துக் கொள்பவை. முதல் வகை அமினோ அமிலங்களில் 'லைசின்', 'மெதியோனின்', 'சிஸ்டின்', 'அர்ஜினைன்', 'கிஸ்றிடின்' போன்றவைகள், குழந்தைகளின் திசுக்கள் நன்கு வளர இன்றியமையாதது ஆகும். மீனில் 'அர்ஜினைன்' என்ற அமினோ அமிலம் அதிக அளவில் உள்ளது. 'மெதியோனின்', 'சிஸ்டின்' என்ற அமினோ அமிலங்களும் மித அளவில் அடங்கியுள்ளன. இவை கல்லீரல் தொடர்பான நோய்களைத் தடுக்கும் சக்திஉடையன. தைரோசின் என்ற அமினோ அமிலமும் தகுந்த அளவில் மீனில் உள்ளது. இது, 'அயோடின்' குறையைத் தவிர்க்கும் சக்தி பெற்றது ஆகும். இவ்விதம் தனித் தன்மை வாய்ந்த புரதம் ஈரம் நீக்கிய மீனில் சராசரி 85 சதம் உள்ளது.

### கொழுப்புச் சத்து

நாம் உண்ணும் உணவில் இருக்கும் கொழுப்பின் அளவிற்கும், தரத்திற்கும், இருதய நோய்க்கும் உள்ள தொடர்பைக் குறித்து ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. மாமிச உணவில் அடங்கி இருக்கும் கொழுப்பு இருதய நோய் ஏற்பட ஒரு காரணமாய் அமைந்துள்ளது என்று ஆய்வு மூலம் கண்டிருக்கின்றனர். இருதய நோய் உள்ளவர்களும், இரத்த அழுத்தம் சம்பந்தமான நோய் உள்ளவர்களும் தமது உணவில் ஓரிரு மாற்றங்கள் செய்யும்படி பரிந்துரைக்கப்படுதல் சாதாரண வழக்கம் :

1. உணவில் கொழுப்பையும், சக்தியையும் (Calorie) குறைத்துக் கொள்ளுதல்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெறாத கொழுப்பு அமிலங்களை (Poly unsaturated fatty acid) நிறைவு பெற்ற கொழுப்பு அமிலங்களுக்கு ( Saturated fatty acid ) பதில் பயன்படுத்துதல்.
3. அதிகம் 'கொலஸ்டிரால்' அடங்கிய உணவை விலக்குதல்.

நமது உடலின் கொழுப்புத் தேவையை மீன் சரிப்படுத்துவதோடு (Regulate), சக்தியையும் வெகுவாகக் குறைத்து உடலுக்கு போதுமான அளவு புரதத்தையும் தருகிறது. 250 கிராம் கொழுப்புக் குறைந்த மீன், 100 கலோரி சக்திக்குமேல் தருவதில்லை. இது ஆடு, மாடு இவைகளின் மாமிசம்

தரும் கலோரிச் சக்தியை விட மூன்று மடங்கு குறைவே ஆகும். இவ்விதம் கொழுப்புக் குறைந்த மீன், புரத வளத்தை அதிகரித்து கலோரிச் சக்தியையும், கொழுப்பையும் குறைக்கும் ஒரு உணவாக பயன்படுகிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெறாத கொழுப்பு அமிலங்களுக்காகச் சிலர் எண்ணெய் வகைகளை உட்கொள்ளுவது வழக்கம். இதற்குப் பதிலாக மீனை உணவில் சேர்த்துக் கொண்டால் சுவை மிகுந்த உணவாக அமைவதோடு அன்றி, எண்ணெய்ச் சத்தையும் தருகிறது. 100 கிராம் மீன், சராசரி 10 கிராம் நிறைவு பெறாத கொழுப்பு அமிலங்கள் அடங்கிய எண்ணெய்ச் சத்தைத் தருகிறது.

மீனின் கொழுப்பு மீனுக்கு மீனும், காலத்திற்குக் காலமும் மாறுபடும். கொழுப்பு குறைந்த மீன்களை எடை கட்டுப்படுத்த விரும்புகிறவர்கள் பயன்படுத்தலாம்.

ஒன்றிற்கு மேற்பட்ட நிறைவு பெறாத கொழுப்பு அமிலங்கள் மிக அதிக விகிதத்தில் மீனில் அடங்கியுள்ளதால் இரத்த நாளங்கள் தொடர்பான நோயுடையோர் மீனை அதிக அளவில் உண்ணும்படி மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மனித இரத்தத்தில்கலந்துள்ள 'கொலஸ்டிரால்' என்ற கொழுப்புப் பொருள் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தி, இரத்தக் கொதிப்பு நோய்க்கு மூல காரணமாய் அமைவதை நாம் அறிவோம். ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவு பெறாத கொழுப்பு அமிலங்கள் அடங்கியுள்ள எண்ணெய்யை உட்கொள்வதால், இரத்த அழுத்தத்தைக் குறைக்க இயலும்.

பொதுவாக இரத்தக் கொதிப்பு நோயினர் மற்ற மாமிசத்தைப் போல மீன் உணவையும் ஒதுக்குவது வழக்கம். இது ஒரு வகையில் தவறான கருத்தாகும். ஏன் எனில், மீன் உணவில் 'கொலஸ்டிரால்' மற்றைய மாமிசத்தைக் காட்டிலும் சராசரி பத்து மடங்கு குறைவாகவும், கோழி முட்டையைக் காட்டிலும் இருபதுமடங்கு குறைவாகவும் உள்ளது.

உயிர்சத்துக்களை நீரில் கரைவன (Water soluble) என்றும், கொழுப்பில் கரைவன (Fat soluble) என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நீரில் கரையும் உயிர்ச்சத்துக்கள் மீனின் சதைப் பகுதியிலும், கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்கள் மீன் எண்ணெய்யிலும், மீனின் கொழுப்பிலும் உள்ளன. மீன் எண்ணெயில் உயிர்ச்சத்து 'ஏ'யும், 'டி'யும் முக்கியமாக உள்ளது. உயிர்ச்சத்து 'ஏ' பாலைக் காட்டிலும் சராசரி ஆயிரம் மடங்கும், மற்றைய மாமிசத்தைப் பார்க்கிலும் ஏழாயிரம் மடங்கும் அதிகமாக உள்ளது. கொழுப்பான மீன்களில் உயிர்ச்சத்து 'டி' யும் அதிக அளவில் அடங்கியுள்ளனது. நீரில் கரையும் உயிர்ச்சத்துக்களான 'பி6', 'பி12', 'பையாட்டின்', 'நையாஸின்' ஆகியவைகளும் தகுந்த அளவில் உள்ளன. மீனுணவில்உள்ள உயிர்ச்சத்து 'பி12', நெய்யைவிட ஐந்து மடங்கு அதிகமாகவும், மற்றைய மாமிசத்தைவிட பத்து மடங்கு அதிகமாகவும் உள்ளது.

**கனிமங்கள் (தாது உப்புக்கள்)**

பொதுவாக மீன் உணவில் சுண்ணாம்புச் சத்து (Calcium) பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து ஆகியவைகள் தேவையான அளவில் அடங்கியுள்ளன. ஒரு சில மீன்களைத் தவிர, மற்றைய மீன்களில் 'சோடியம்' மிகக் குறைவாகவே உள்ளது. ஆகவே, 'சோடியம்' குறைவாகவே பயன்படுத்த வேண்டிய இரத்தக் கொதிப்பு நோயாளிகள், தயக்கமின்றி மீனை உணவில் சேர்த்துக்கொள்ளலாம். **வளரும் சிறுர்களின் எலும்பு வளர்ச்சிக்கும், அவைகளின் உறுதிக்கும் தேவையான சுண்ணாம்புச் சத்தை மீன் உணவால் திருப்தி செய்ய முடியும்,** இந்த சுண்ணாம்புச் சத்து உடலில் தன்மயமாக, மாமிசப்புரதம் உதவி செய்வதாக கருதப்படுகிறது. ஏனெனில், மாமிசப் புரதத்திலுள்ள 'லைசின்' என்ற அமினோ அமிலத்திற்கு கட்டும் திறன் (Binding Capacity) ஒரு சிறப்புப் பண்பாகும். இது மட்டுமல்லாமல் புரதக்குறை ஏற்படுமாயின், உடலின் சுண்ணாம்புச் சத்தும் மூன்றில் ஒரு பங்கு வரை குறைந்து விடுவதாக கணித்திருக்கின்றனர். இவ்வாறு குறையும் சுண்ணாம்புச்சத்தை ஈடு செய்ய, எலும்பு தனது சுண்ணாம்புச் சத்தைக் கொடுத்து பலமிழந்து



# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட
11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

இயக்குநர்,
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.

விடவும் செய்யும். ஆகவே இவ்வாறு கருதப்படும் பெருங்குறைகளை மீன் உணவு தவிர்க்கும் சிறப்புப் பண்புகளைக் கொண்டது

**செரிக்கும் திறன்**

மீன் உணவு அதிவிரைவில் செரித்து விடுவதால் மருத்துவர்கள் மற்றைய மாமிச உணவுக்குப் பதில் மீன் உணவை உண்ணும்படி கூறுகின்றனர். அது மட்டுமல்ல, **மீன் உணவு ஜீரணச் சுரப்பிகளை தூண்டி, ஜீரண நீரை சுரக்கச் செய்யும் பண்பையும் கொண்டுள்ளது** ஆடு, மாடு, கோழி இவைகளின் மாமிசம் சராசரி 85 சதம் தான் செரிக்கிறது. ஆனால் மீன் உணவு அநேகமாக 95 சதமும் செரித்து விடுகிறது. மீன் உணவில் செரிக்கும் பகுதி அதிகமாய் இருப்பதாலும், நார்ப் பகுதி இல்லாததாலும் மீன் உணவை சிறுவர்களும், முதியோர்களும், குடற்புண் போன்ற நோயால் தாக்கப்பட்டவர்களும் உணவில் சேர்த்துக் கொள்வது நலம்.

**சில மீன்களின் முக்கியப் பண்புகள்**

**சாதாக் கெண்டை :** இதில் சராசரி சுண்ணாம்புச் சத்து 1.26 சதமும், இரும்புச் சத்து 0.013 சதமும் உள்ளது. குளங்களில் அதிவேகத்தில் வளரும் திறனும் இதற்கு உண்டு.

**தட்டரி ஞான் :** இதில் சுண்ணாம்புச் சத்து 0.79 சதம் உள்ளது.

**ரோகு:** இதில் உயிர்ச்சத்து 'ஏ', 'பி', 'சி' ஆகியவைகள் ஒருங்கிணைந்து அதிக அளவில் இருப்பதால், கண் ஒளி குன்றியவர்கள் இதை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம். 'அயோடின்' இதில் சராசரி ஒரு கிலோவுக்கு 3.1 மி.கி. என்ற விகிதத்தில் அடங்கியுள்ளது. 'தைராய்டு' சம்பந்தமான குறைநோயுடையோர்களுக்கு இது நல்லது.

**தோப்பா:** இதில் சுண்ணாம்புச் சத்து 0.510 சதமும், பாஸ்பரஸ் 0.21 சதமும் உள்ளது. இதன் அயோடின் சத்து 1 கிலோவுக்கு சராசரி 1.5 மி.கி. என்ற அளவில் உள்ளது. இவ்வகை மீனும் குளங்களில் அதிக வேகத்தில் வளரும்.

**தகவல்:** சாமுவேல் பால்ராஜ்,
மீன்வள அறிவியல்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-3.

# வேளாண்மையுடன் மீன் வளர்ப்பு



வேளாண்மையுடன் மீன் வளர்ப்புத் தொழிலையும் மேற்கொண்டு கூடுதல் உணவுப் பொருள் உற்பத்தியையும், வருவாயையும் பெறலாம் என்பதைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள மீன் வள அறிவியல் துறையினர் கண்டுள்ளார்கள். வேளாண்மைக்குப் பயன்படும் தண்ணீரையே பயிர்களுக்குப் பாய்ச்சும் முன்னர் சிமெண்ட் தொட்டிகள் அல்லது மண் குளங்களில் தேக்கி, மீன் வளர்த்து மீன் உற்பத்தியையும், வருவாயையும் பெருக்கிக் கொள்ளலாம்.


இப்பல்கலைக் கழகத்திலுள்ள சிமெண்ட் தொட்டிகள் பல்வேறு பயிர்களுக்கு வேண்டும்போது நீர்ப் பாய்ச்சுவதற்காக, நீர் தேக்கி வைக்கும்தொட்டிகளாகப் பயன்படுகின்றன. 12 மீட்டர் குறுக்களவும், 0.85 மீட்டர் ஆழமும் கொண்ட இரண்டு தொட்டிகளில் ஓர் ஆண்டு வயதான மீன் வகைகளை விட்டு வளர்த்துப் பரிசோதனை செய்யப்பட்டது. முதல் தொட்டியில் சேல் கெண்டை, மிர்கால், காக்கா மீன் இனங்களை எக்டருக்கு 6,000 எண்ணிக்கை-450 கிலோ வீதம் விடப்பட்டது. இரண்டாவது தொட்டியில் தோப்பா, ரோகு, சாதாக் கெண்டை, செத்தக் கெண்டை என்ற நான்கு வகை மீன்களை எக்டருக்கு 8,850 எண்ணிக்கை (400 கிலோ) என்ற அளவில் இருப்பு செய்யப்பட்டன. இவைகளின் எடையில் 5 சதவீத அளவு கடலைப் பிண்ணாக்கு, அரிசித்தவிடு முதலியன சரிபாதி விகிதத்தில் உணவாகக் கொடுக்கப்பட்டது.

ஒரு ஆண்டில் எக்டருக்கு நிகர உற்பத்தி எடை 2,300 கிலோ என்று மூன்று வகை மீன்களைக் கொண்டு பரிசோதித்த தொட்டியிலும், எக்டருக்கு 1,157 கிலோ என நான்கு வகை மீன்கள் இருப்பு செய்த தொட்டியிலும் கிடைக்கப் பெற்றது. இந்த எடை இந்தியாவில் குளங்களில் எக்டருக்குச் சராசரி ஆண்டு உற்பத்தியாகக் கிடைக்கும் 600 கிலோ என்பதைக் காட்டிலும், 2 முதல் 4 மடங்கு அளவு அதிகமாகக் காணப்படுகிறது.

மேலும், 180 சதுர மீட்டர் அளவுள்ள ஐந்துமண் குளங்களில் ஏழு வகையான மீன் குஞ்சுகளைக் கொண்டு சோதனை செய்யப்பட்டது. தோப்பா, மிர்கால், சேல் கெண்டை, சாதாக் கெண்டை, பால் கெண்டை, வெள்ளி நிறக் கெண்டை, புல் உண்ணும் கெண்டை ஆகிய ஏழு மீன் இனங்களின் குஞ்சுகளை எக்டருக்கு 4,750 என்ற எண்ணிக்கையில் விட்டு வளர்த்ததில் நிகர உற்பத்தி எக்டருக்கு ஆறுமாதங்களில் 1,400 கிலோ முதல் 1,660 கிலோ வரை கிடைத்தது.

விவசாயிகள் இயன்ற வரை வேளாண்மைக்குப் பயன்படும் நீரையே பயன்படுத்தி மண் குளங்களிலோ அல்லது சிமெண்ட் தொட்டிகளிலோ மீன் உற்பத்தி செய்து சத்துணவையும், வருவாயையும் பெறலாம்.

**தகவல் :** மீன் வள அறிவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.




TNSCB; 112

# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

# மின்சார வாரியத்தின் சீரிய பணிகள்

எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ்.,
தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம்.

**நா**ட்டின் வளமும் மின்சார வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று இணைந்துள்ளது. 20 அம்சத் திட்டத்தின் 8-வது அம்சத்தில் மின் உற்பத்தி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 20 அம்சத் திட்டப்பாதையில் மின் வாரியம் தீவிர கவனம் செலுத்தி, மின்வளர்ச்சிக்கான பல திட்டங்களை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக எண்ணூர் அனல் மின் நிலையத்தைச் சீர்படுத்தி, மின் உற்பத்தியை நல்ல முறையில் அதிகப்படுத்தியுள்ளது. கடந்த 5 மாதங்களில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 787.63 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டு மின் உற்பத்தியைவிட 1.5 மடங்கு அதிகமாகும்.

தூத்துக்குடியில் 420 மெகாவாட் திறன்கொண்ட அனல் மின் நிலையத்தை அமைக்கும் வகையில் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மொத்த மதிப்பீடு ரூ. 129.29 கோடிகள். இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ. 34.5 கோடி அனுமதிக்கப்பட்டு, ஏப்ரல், மே ஆகிய இரு மாதங்களில் ரூ. 1.36 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த அனல் மின் நிலையத்தின் முதல் மின்பிரிவு 78-79-ஆம் ஆண்டில் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஆண்டிற்கு 40 மி.யூ. மின் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ''குட்டியாறு பம்பிங்'' திட்ட வேலையும் முடியும் தறுவாயில் உள்ளது.

76 மி.யூ. திறன் கொண்ட குந்தா 4-வது பகுதித் திட்டவேலை தீவிரமாக நடைபெற்றுவருகிறது இந்தத் திட்டம் 77-'78-ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.


114 மி.யூ. உற்பத்தித் திறன் கொண்ட ''சுருளியாறு மின் திட்ட'' வேலை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. '78-'79-ஆம் ஆண்டில் இந்த வேலை முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் 70 சதம் கிராமத்தில் வசிக்கிறார்கள். ஆகையால் கிராம மின்வசதியில் மின்வாரியம் தீவிர கவனம் செலுத்தி வந்துள்ளது. கடந்த 5 மாதங்களில் 70 சிற்றூர்களுக்கும், 150 அரிசன குடியிருப்புகளுக்கும் மின் வசதி வழங்கியுள்ளது. இதன் மூலம் 98.3 சதவிகிதம் சிற்றூர்களுக்கு மின்வசதி இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

விவசாயப் பெருக்கத்திற்காக கடந்த 5 மாதங்களில் 20,331 விவசாய பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கி, மகத்தான சாதனையை தமிழ்நாடு மின்சார வாரியம் செய்துள்ளது. இதுவரை 62.7 சதவிகித விவசாயக் கிணறுகளில் உள்ள பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது.

மேலும் வறட்சிப் பகுதிகளில் மக்கள் நலனைக் கருதிக் குடிதண்ணீர்த் திட்டங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதில் எவ்விதத் தாமதமும் இன்றி, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து, முன் ஆய்வு இல்லாமல், மின் இணைப்பு வழங்குவதற்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மின்வாரியம் மக்கள் நல்வாழ்விலும், கிராம முன்னேற்றத்திலும், பொருளாதார உயர்விலும் கவனம் செலுத்தி வந்துள்ளது. மின்சாரத்தைச் சீராக வழங்கவும் பல திட்டங்களை மேற்கொண்டு செயல்பட்டு வருகிறது.



# ஊட்டச் சத்துணவு பெற

# வீட்டுத் தோட்டம்

# அமைத்திடுங்கள்!




**நா**ம் அனைவரும் அறிவுடனும், ஆற்றலுடனும், அழகுடனும் வாழவேண்டுமானால் நம் நாட்டின் வளத்தைப் பெருக்கவேண்டுமானால்-நாம் அனைவரும் நம்முடைய அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும். ஏனெனில், காய்கறிகள் நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அளிப்பதுடன் நம்மைத் தாக்கவல்ல நோய்களைத் தடுக்கவல்ல காப்பு உணவாகவும் (Protective food) விளங்குகிறது. எனவேதான், அன்றாட உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை ஊட்டச் சத்துணவு அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றார்கள்.

**ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியின் படி வயதுவந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் 285 கிராம் (10 அவுன்சு) காய்கறிகளை உட்கொள்ள வேண்டும் என்றும், அதில் 115 கிராம் (4 அவுன்சு) இலைவகைக் (கீரை) காய்கறிகளாகவும் (Leaf Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளாகவும் (Tuber and Root Vegetables), 85 கிராம் (3 அவுன்சு) விதை மற்றும் பழவகைக் காய்கறிகளாகவும் (Seeds and Fruit Vegetables) அமைந்திருக்க வேண்டும் என்றும் ஊட்டச்சத்துணவு வல்லுநர்கள் (Nutrition Experts) பரிந்துரைத்துள்ளார்கள்.**



**—ஆர். மாணிக்கம்.**

பல்வேறு உணவியல் அறிஞர்கள் பரிந்துரைத்துள்ள உணவு அட்டவணைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தபின் **திரு. பி. சி. பான்சில் என்ற திட்ட வல்லுநர், ''70 கோடி மக்களுக்கான வேளாண்மைத் திட்டம்'' என்ற நூலில், 'சமநிலை உணவு' (Balanced Diet) பெற, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 7 அவுன்சு காய்கறிகளும், 2 அவுன்சு வேர் மற்றும் கிழங்குகளும் தேவை** என்று திட்டவட்டமாக விளக்கியுள்ளார்.



ஆனால் தற்பொழுது நாம் ஒவ்வொருவரும் நாள்தோறும் உட்கொள்ளும் காய்கறிகளின் சராசரி அளவு ஏறத்தாழ 3 அவுன்சு என்ற நிலையில்தான் உள்ளது. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்கம் நடத்திய கள ஆய்வின் மூலம் 61 சதவீதக் குடும்பங்களே நாளொன்றுக்கு ஒருமுறையாவது காய்கறிகளை உண்பதாகவும், நாளொன்றுக்கு வயது வந்த ஒருவர் அவ்வாறு உண்ணும் அளவும் 2.8 அவுன்சு என்ற அளவிலேயே உள்ளது என்றும் தெரியவந்துள்ளது. மேலும், அந்த ஆய்வின் மூலம் சென்னையில் வாழும் மக்களே உயர்ந்த அளவாக-நாளொன்றுக்கு 4.8 அவுன்சு என்ற அளவில்

தொடர்—...




காய்கறிகளை உண்பதாகவும், கோயம்புத்தூரில் உள்ளவர்கள் நாளொன்றுக்கு 4.5 அவுன்சு காய்கறிகளையே உண்பதாகவும், நீலகிரியில் வாழும் மக்களே மிகக் குறைந்த அளவில்-நாளொன்றுக்கு 0.8 அவுன்சு என்ற அளவில்-காய்கறிகளை உண்பதாகவும் தெரியவந்துள்ளது.

ஊட்டச் சத்துணவு வல்லுநர்கள் பரிந்துரைக்கும் அளவில் நாம் காய்கறிகளை உண்பதில்லை. இதற்கு முக்கிய காரணங்கள் மூன்று; அவை:

1. காய்களில் உள்ள ஊட்டச் சத்துக்களை உணராமை.

2. காய்கறிகளின் உற்பத்திக் குறைவினால் ஏற்பட்டுள்ள பற்றாக் குறை.

3. அதிக விலை.

எனவே, முதலில் காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்தினை எல்லாருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. அடுத்து, காய்கறிகளின் உற்பத்தியைப் பெருக்கி, குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு பணிகளையும் செவ்வனே செய்தால்தான், சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை, எளிய, சாமான்ய, பாமர, பாட்டாளி, தொழிலாளி மக்கள் முதல், சமுதாயத்தின் மேல்மட்டத்தில் உள்ளவர்கள் வரை எல்லாரும் ஊட்டச்சத்துணவு பரிந்துரைக்கும் அளவில் காய்கறிகளை அன்றாடம் உண்ணமுடியும்!

## காய்கறிகளை ஏன் உண்ண வேண்டும்?

(1) காய்கறிகள் புரதச்சத்து (Protein), மாவுப் பொருள்கள் (Carbo hydrates), தாது உப்புகள் (Mineral Salts), உயிர்ச் சத்துக்கள் (Vitamins) ஆகிய சத்துக்களை நமக்குக் கொடுக்கின்றன.

2. உணவில் சுவை ஏற்படுத்துகின்றன.

3. நமக்குத் தேவையான எல்லா சக்திகளையும் அளித்து உடல் நலத்தைப் பாதுகாக்கின்றன.

4. நம் உடலுறுப்புகள் வலுவடையவும், நாம் ஊக்கத்துடன் பணிகளில் ஈடுபடவும் உதவுகின்றன.

5. நமக்கு வலிவை மட்டுமல்ல வனப்பையும் தருகின்றன.

எனவே, நாம் ஒவ்வொருவரும் நம் உணவில் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நாம் அரிசி உணவை மட்டுமே உட்கொள்பவர்களாக இருந்தால் நாள்தோறும் நம் உடலுக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தை (கால்சியம்) அரிசி உணவு கொடுப்பதில்லை. ஆனால் இலை வகைக் காய்கறிகள் (Leafy Vegetables) நமக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தைப் பெற உதவுகின்றன.


இலைவகைக் காய்கறிகளான தண்டுக்கீரை, அகத்திக் கீரை, முட்டைக்கோஸ், முருங்கை இலை, 'ஸ்பைனாஸ்', புதினா போன்றவைகள் சிறந்த பாதுகாப்பு உணவாகும். ஏனென்றால் அவைகளில் சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து ஆகியவை அடங்கிய தாது உப்புகளும் வைட்டமின்களும் நிறைந்துள்ளன.

விதை வகைக் காய்கறிகளான (Seed Vegetables) 'பீன்ஸ்' பட்டாணி, இளம் மக்காச்சோள விதை போன்றவைகள் வயிறு நிரம்புவதற்கான திடப்பொருள்களையும் (Roughage) புரதச்சத்து, வைட்டமின் 'சி' ஆகியவைகளையும் கொடுக்கின்றன.

பழவகைக் காய்கறிகளான (Fruit Vegetables) தக்காளி, பலாக்காய், வாழைக்காய், முருங்கைக் காய், கத்தரி, வெண்டை, பூசணி, பறங்கி போன்றவைகள் சிறந்த சத்துக்களைக் கொண்டுள்ளன. தக்காளியில் வைட்டமின் 'சி' யும், முருங்கைக்காயில் சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'சி'யும் நிறைய உள்ளன. பறங்கிக் காயில் வைட்டமின் 'ஏ' பெருமளவில் உள்ளன.

கிழங்கு மற்றும் வேர் வகைக் காய்கறிகளான (Tuber & Root Vegetables) உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, கருணைக் கிழங்கு, சேனைக் கிழங்கு, கேரட், பீட்ரூட், முள்ளங்கி, 'டர்னிப்' போன்றவைகள் தானியங்களைப் போலவே மாவுப் பொருள்களையும், வைட்டமின் 'சி'யையும் வழங்குகின்றன. சர்க்கரை வள்ளிக்கிழங்கும், கேரட்டும் வைட்டமின் 'ஏ' யைக் கொடுக்கின்றன. இவ்வகைக் காய்கறிகள், உடலுக்குத் தேவையான சக்தியைக் கொடுக்கும் மாவுப் பொருள்களைக் கொடுப்பதால், நமது உணவில் தானியங்களுக்குப் பதிலாக இவைகளைப் பயன்படுத்தி, தானியங்களில் ஒரு பகுதியைக் குறைத்து, மீதப்படுத்தலாம். இவ்வகைக் காய்கறிகளே குறைந்த செலவில் சக்தியைத் தரும் உணவுகளாகும்.

சில முக்கிய காய்கறிகளில் உள்ள ஊட்டச் சத்துகளைப் பின்கண்ட அட்டவணை 1 - இல் இருந்து அறிந்து கொள்ளலாம்.



அட்டவணை-1.

# ஒரு அவுன்சு (28 கிராம்) காய்களில் உள்ள ஊட்டச்சத்துகள்

| வரிசை எண் | காய்களின் பெயர் | புரதச்சத்து (கிராம்) | கொழுப்பு (கிராம்) | மாவுப்பொருள் (கிராம்) | சுண்ணும்பு (மில்லிகிராம்) | பாஸ்பரஸ் (மில்லிகிராம்) | இரும்பு (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-ஏ (இண்டர்நேஷனல் யூனிட்) | உயிர்ச்சத்து-பி (மில்லிகிராம்) | நிக்கோடினிக் அமிலம் (மில்லிகிராம்) | ரிபோபிளேவின் (மில்லிகிராம்) | உயிர்ச்சத்து-சி (மில்லிகிராம்) | கலோரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1. | முட்டைக்கோசு | 0.5 | 0.1 | 1.8 | 8 | 11 | 0.2 | 568 | 14 | 0.1 | 9 | 35 | 9 |
| 2. | காலிபிளவர் | 1.0 | 0.1 | 1.5 | 8 | 17 | 0.4 | 122¼ | 31 | 0.3 | 23 | 19 | 11 |
| 3. | காரட் | 0.3 | 0.1 | 3.0 | 23 | 8 | 0.4 | 568 | 17 | 0.1 | 6 | 1 | 13 |
| 4. | பீட்ரூட் | 0.5 | 0.1 | 3.9 | 57 | 17 | 0.3 | சிறு அளவு | 20 | 0.1 | 26 | 25 | 18 |
| 5. | முள்ளங்கி | 0.2 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 1 | 17 | ... | ... | 4 | 6 |
| 6. | உருளைக்கிழங்கு | 0.5 | 0.1 | 6.5 | 3 | 9 | 0.2 | சிறு அளவு | 6 | 0.3 | 3 | 1 | 28 |
| 7. | மரவள்ளிக்கிழங்கு | 0.2 | 0.1 | 10.9 | 10 | 10 | 0.2 | ... | 4 | 0.1 | 28 | ... | 45 |
| 8. | சர்க்கரை வள்ளிக் கிழங்கு | 0.3 | 0.1 | 8.8 | 6 | 10 | 0.2 | 3 | ... | 0.2 | 11 | 7 | 37 |
| 9. | கத்தரி | 0.4 | 0.1 | 1.8 | 60 | 17 | 0.4 | 1 | 4 | 0.2 | 26 | 6 | 10 |
| 10. | வெண்டை | 0.6 | 0.1 | 2.2 | 25 | 23 | 0.4 | 16 | 6 | 0.2 | ... | 4 | 12 |
| 11. | தக்காளிக்காய் | 0.5 | 0.1 | 1.3 | 6 | 11 | 0.7 | 91 | 7 | 0.1 | 17 | 9 | 8 |
| 12. | தக்காளிப்பழம் | 0.3 | 0.1 | 1.1 | 3 | 6 | 0.1 | 91 | 11 | 0.1 | 17 | 7 | 6 |
| 13. | பெல்லாரி வெங்காயம் | 0.3 | 0.1 | 3.3 | 50 | 14 | 0.2 | ... | 11 | 0.1 | 3 | 3 | 14 |
| 14. | நாட்டு வெங்காயம் | 0.5 | 0.1 | 3.7 | 11 | 39 | 0.3 | 7 | 22 | 0.1 | ... | ... | 17 |
| 15. | புடல் | 0.1 | 0.1 | 1.2 | 14 | 6 | 0.4 | 45 | ... | 0.1 | 17 | சிறு அளவு | 6 |
| 16. | பாகல் | 0.5 | 0.1 | 1.2 | 6 | 20 | 0.6 | 60 | 7 | 0.1 | 26 | 25 | 7 |
| 17. | பறங்கி | 0.4 | 0.1 | 1.5 | 3 | 8 | 0.2 | 24 | 6 | 0.1 | 11 | 1 | 8 |
| 18. | வெள்ளரி | 1.0 | 0.1 | 0.8 | 3 | 8 | 0.4 | சிறு அளவு | 8 | 0.1 | 1 | 2 | 4 |
| 19. | முருங்கைக்காய் | 0.7 | 0.1 | 1.0 | 8 | 30 | 1.5 | 52 | ... | 0.1 | ... | 34 | 7 |
| 20. | கருணைக்கிழங்கு | 0.4 | 0.1 | 7.5 | 17 | 6 | 0.4 | ... | 7 | 0.2 | ... | சிறு அளவு | 32 |
| 21. | பீன்ஸ் | 1.3 | 0.1 | 2.8 | 14 | 17 | 0.5 | ... | ... | 0.2 | ... | 3 | 17 |
| 22. | வாழைக்காய் | 0.4 | 0.1 | 4.2 | 3 | 8 | 0.2 | 14 | 4 | 0.1 | 57 | 7 | 18 |
| 23. | ஸ்பைஞஷ் | 0.5 | 0.3 | 1.1 | 17 | 3 | 1.4 | 994 | 20 | 0.1 | 17 | 14 | 9 |
| 24. | புதினா | 0.5 | 0.2 | 2.2 | 56 | 21 | 4.2 | 756 | 14 | 0.1 | ... | 3 | 16 |
| 25. | தண்டுக்கீரை | 1.4 | 0.1 | 1.6 | 14 | 3 | 6 | 700 முதல் 3,080 | 8 | 0.3 | ... | 48 | 17 |
| 26. | கறிவேப்பிலை | 1.7 | 0.3 | 4.4 | 224 | 17 | 0.8 | 3,528 | 22 | 0.6 | ... | 1 | 27 |



11. உடற் பயிற்சியாகவும் இருக்கும்.

12. கண்ணிற்குக் குளிர்ச்சி தரும்.

13. மனத்திற்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கச் செய்யும்.

14. நல்வழியில் நாட்டம் ஏற்படுத்தும்.

15. சுவையான உணவு கிடைக்கச் செய்யும்.

16. நலமான வாழ்வு தரும்.

காய்கறிகளில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளதால் நாம் ஒவ்வொருவரும் இலை, விதை, பழம், வேர் மற்றும் கிழங்கு வகைக் காய்கறிகளை நமது உணவில் நாள்தோறும் சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

**வீட்டுத் தோட்டத்தின் இன்றியமையாமை**

ஊட்டச்சத்துணவு ஆராய்ச்சியாளர்களின் பரிந்துரைப்படி தமிழ்நாட்டின் மக்களுக்கு இந்த ஆண்டில் (1976-77), ஏறத்தாழ 42 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள் தேவைப்படுகின்றன. ஆனல் தற்பொழுது தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் சராசரியாக 10 அல்லது 12 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகளே உற்பத்தியாகி வருகின்றன. எனவே, நமக்குத் தேவைப்படும் காய்கறிகளில் நான்கில் ஒரு பகுதியையே நாம் தற்பொழுது உண்ண முடிகிறது.

ஊட்டமளிக்கும் காய்கறிகள் தேவையான அளவுக்கு நமக்குக் கிடைக்காததால், நம்மில் பலர் தேவையான அளவுக்கும் அதிகமான தானிய உணவை உண்ணுகின்றோம். இதனல் ஊட்ட உணவுப் பற்றுக்குறை (Under nutrition) ஏற்படுவதுடன், தானியப் பற்றுக்குறையும் ஏற்படுகிறது. ஊட்ட உணவுப் பற்றுக்குறையால் உடல் நலம் கெடும்; கண்பார்வை மங்கும்; உடல் வலிமை குன்றும்; உழைக்கும் ஆற்றல் குறையும்; உடல் எளிதில் கொடிய நோய்களால் தாக்கப்படும்.

இந்தியாவில் 100-க்கு 50 பேர்கள் ஊட்ட உணவுப் பற்றுக்குறை அல்லது ஊட்டக் குறைவினல் (Malnutrition) பாதிக்கப்படுகின்றார்கள் என்று உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health organisation) கருத்துத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் தற்பொழுது நிலவி வரும் ஊட்ட உணவுப் பற்றுக்குறை, ஊட்டக் குறைகளைப் போக்கிட காய்கறி உற்பத்தியைப் பெருக்கி நம் உணவில் காய்கறிகளைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, காய்கறி உற்பத்தியைப் பெருக்கிட, நாம் ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

**வீட்டுத் தோட்டத்தின் பயன்கள்**

''பதினுறும் பெற்றுப் பெருவாழ்வு வாழு'' என்பதுபோல், வீட்டுத் தோட்டம் அமைத்தால் கீழ்க்கண்ட பதினுறு பயன்கள் கிடைக்கும்.

1. புத்தம் புதிய காய்கறிகளைப் (Fresh Vegetables) பெறலாம்.

2. விருப்பமான காய்களைப் (Choice Vegetables) பெறலாம்.

3. பலவகைக் காய்களையும், பசுமையாகப் (Green Vegetables) பெறலாம்.

4. வேண்டியபோது, காய்களைப் பறித்துக்கொள்ளலாம்.

5. சுவை குன்ருத காய்களைப் (Tasteful Vegetables) பெறலாம்.

6. உயிர்ச் சத்துக்கள் மிகுந்த காய்களைப் (Vitamin-rich Vegetables) பெறலாம்.

7. குறைந்த செலவில் காய்களை விளைவிக்கலாம்.

8. சமையலறைக் கழிவு நீரையும் உபயோகப்படுத்த முடியும்.

9. வீட்டுக்கு அழகு சேர்க்கும்.

10. பொழுது போக்காகவும் அமையும்.

**வீட்டுத் தோட்டம்**

**—அமைக்கும் முறை**

1. குடும்பத்தினரின் விருப்பத்திற்கேற்றவாறும்,

2. கிடைக்கும் இடத்தின் அளவுக்குத் தகுந்தாற்போலவும்,

3. நிலத்திற்கும், பருவத்திற்கும் ஒத்ததாகவும்,

4. ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கள் கிடைக்கும் வகையிலும்,

5. வரப்பின் பக்கம், வாய்க்கால் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகள் முதலிய இடங்களை நன்கு பயன்படுத்தும் முறையிலும்,

6. குறைந்த செலவில் நிறைந்த மகசூல் பெறும் வகையிலும்,

வீட்டுத் தோட்டத்தைத் திட்டமிட்டு அமைக்க வேண்டும். ஆனல் சிலர் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் வெகு ஆர்வம் காட்டி ஈடுபட்டாலும், முதல் முயற்சியிலேயே தோல்வி கண்டுவிடுகின்றனர். இதற்குக் காரணம் வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை உணராமையே! எனவே, வீட்டுத் தோட்டம் அமைப்பதில் உள்ள நுட்பங்களை ஒவ்வொன்ருகக் கீழே விளக்கியுள்ளோம்.

**இடம்**

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வேண்டிய காய்கறிகளை உற்பத்தி செய்ய 5 சென்ட் நிலம் வேண்டும்.

அந்த 5 சென்ட் நிலமும், குறைந்தது நாள்தோறும் 6 மணி நேரமாவது சூரிய வெளிச்சம் படக்கூடிய திறந்த வெளியாக இருக்க வேண்டும்.


(28-ஆம் பக்கம் பார்க்கவும்.)




தேசிய இலக்கிய மன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ''இமயமும் குமரியும்'' என்ற இரண்டு நாள் கருத்தரங்கை 17-7-'76 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார்.

# படமும் செய்தியும்

இந்திய அரசின் தொழில் மற்றும் நுகர்பொருள் அமைச்சர் திரு டீ. ஏ. பை அவர்கள் திருச்சிராப்பள்ளி பாரத் கனரக மின் சாதன உற்பத்தித் தொழிற்சாலையில் ரூபாய் 58.2 கோடீ செலவில் அமையவிருக்கும் பற்றவைப்பில்லாத எஃகுக் குழாய்த் தொழிற்சாலைக்கு, 19-7-'76-ல் அடிக்கல் நாட்டினர்.





கள்ளக்கடத்தலை ஒடுக்கும் முயற்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், முடிவு ஆகியவை களைப் பற்றி இந்திய அரசின் உள் விவகாரத் துறை மாநிலங்களின் அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்களும் இந்திய அரசின் நிதித் துறை மாநிலங்களின் அமைச்சர் திரு பிரணப் குமார் முகர்ஜி அவர்களும் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் 23-7-'76 அன்று இந்திய அரசின் உயர் அலுவலர்களுடன் விவாதித்தனர்.

காஞ்சிபுரத்தில் தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை இந்திய அரசின் வர்த்தகத் துறை துணை அமைச்சர் திரு விஸ்வ நாத் பிரதாப் சிங் அவர்கள், 23—7—'76 அன்று, தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை யில் துவக்கி வைத்தார்.






செங்கற்பட்டு மாவட்டம், கூடு வாஞ்சேரியில் 25—7—'76-ல் நடைபெற்ற இருபது அம்சப் பொருளாதாரத் திட்ட விளக்க விழாவில், இந்திய அரசின் உள்விவ காரத் துறை அமைச்சர் திரு ஓம் மேத்தா அவர்கள் நிலமற்றவர்களுக்கு நிலப்பட்டா வழங்கினர்.



தென்னர்க்காடு மாவட்ட இருபது அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழா 24—7—'76 அன்று திண்டிவனத்தில் துவக்கப் பெற்றது. அவ்விழாவில், இந்திய அரசின் உள் விவகாரத் துறை மாநிலங்களின் அமைச் சர் திரு. ஓம். மேத்தா அவர்கள் கூட்டுறவு வங்கியால் அனுமதிக்கப்பட்ட நகைக் கடன் களை வழங்கினர்.



திண்டிவனத்தில் 24-7-'76-ல் நடைபெற்ற பலமுனை விளக்க விழாவில் மத்திய வங்கியால் விவசாயிகளுக்குக் கடனில் கொடுக்கப்பட்ட உழவு மாடுகளை திரு ஓம் மேத்தா அவர்கள் வழங்கினர்.




சென்னை மாநகராட்சியும், 'டி.ஐ. சைக்கிள்ஸ்' நிறுவனமும் கூட்டாகச் சேர்ந்து தவணை கொள்முதல் திட்டத்தின் கீழ், சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு அளித்த சைக்கிள்களைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 24—7—'76-ல் வழங்கினார்.



கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி திரு ஓம் மேத்தா அவர்கள், ஏழைத் தையற்காரர்களுக்குத் தையல் இயந்திரம் வழங்கினார்.





பெங்களூரில் நடைபெற்ற காங்கிரஸ் பொருட்காட்சியில் பங்கேற்றிருந்த தமிழ்நாடு அரசு செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் அரங்கத்திற்கு முதற் பரிசு கிடைத்தது. அப்பரிசினை கர்நாடக மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. பட்டீல் அவர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சி அலுவலர் திரு. கோவிந்தராஜ் அவர்கள் 5—5—'76-ல் பெறுவதை இப்படத்தில் காணலாம்.




கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி திரு ஓம் மேத்தா அவர்கள் உழவர் பெருமக்களுக்கு விசைத் தெளிப்பான் வழங்கினர்.



தமிழ்நாட்டில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவது பற்றிய கூட்டம், தலைமைச் செயலகத்தில் 25—7—'76 அன்று திரு. ஓம் மேத்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஆளுநர் ஆலோசகர்கள், தலைமைச் செயலாளர், முதுநிலை அலுவலர்கள், இந்திய குற்றவியல் துறை, சுங்கத் துறை ஆகியவற்றின் அலுவலர்கள், காவல் துறையின் தலைமை அலுவலர் ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



'வன மகோத்சவ' விழாவை முன்னிட்டு, கூடுவாஞ்சேரி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், திரு. ஓம் மேத்தா அவர்கள் 25—7—'76-ல் தென்னங் கன்று ஒன்றை நட்டார்.



மதுராந்தகத்தில் 26-6-'76-ல் நடைபெற்ற அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கால்கோள் விழாவின் போது, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உழவர்களுக்குக் கடன் வழங்கினர்.



கூடுவாஞ்சேரியில் 25-7-'76 அன்று நடைபெற்ற பலமுனை விளக்க விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியைத் திரு ஓம் மேத்தா அவர்கள் பார்வையிட்டார்.




தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 26—7—'76 அன்று பத்திரிகைச் செய்தியாளர் கழகத்திற்கு வருகை தந்து, செய்தியாளர்களுடன் கலந்துரையாடினர்.

(21-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து சென்டு பரப்பு இல்லையெனில், 100 சதுர அடியில்கூட வீட்டுத் தோட்டம் அமைக்கலாம்.

**மண்**


மணலும், களிமண்ணும் சரியான விகிதத்தில் அடங்கிய இருமண்பாடு நிலமே காய்கறி பயிரிட மிகவும் சிறந்தது.

மணற்பாங்கான மண்ணுகை இருந்தால், மாட்டெரு, கலவை எரு (கம்போஸ்டு) போன்ற கரிம எருக்களைப் போட்டு வளமான மண்ணுக்கி விடலாம்.

களி மண்ணுக இருந்தால், மணல், மக்கிய தழை, கரிம எருக்கள் ஆகியவைகளை இட்டும், வடிகால் வசதிகளை அமைத்தும் காய்கறி பயிரிடுவதற்கு ஏற்ற மண்ணுகச் செய்து விடலாம்.

**நிலம் தயாரித்தல்**

5 சென்ட் நிலத்தையும், கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள படி பாத்திகள், நடைபாதை, மைய நடைபாதை, நிரந்தரப் பயிர்களுக்கான பகுதி என்று பிரித்துக் கொள்ள வேண்டும்.




நிலத்தின் பிற்பகுதியை நிரந்தரப் பயிர்களுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல் நான்கு கம்போஸ்டு குழிகளையும் தோண்டுங்கள்.

பாத்திகள் ஒவ்வொன்றும் 20 அடி நீளமும், 10 அடி அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

பாத்திகளின் மேல் மண்ணை 1.5 அடி ஆழத்திற்குத் தோண்டி எடுத்து, அம்மண்ணிலுள்ள கற்களையும், கண்ணுடித் துண்டுகளையும், புற்பூண்டுகளையும் அப்புறப்படுத்திவிட்டு, அம்மண்ணை ஒரு புறமாக வைக்க வேண்டும்.

1.5 அடிக்குக் கீழுள்ள மண்ணை மேலும் 1 அடி ஆழத்திற்குத் தோண்டி, மண் கட்டிகளை உடைத்து, இரு மண்பாடு நிலம் போல ஆக்க வேண்டும்.

அதில் 500 சதுர அடிக்கு 0.5 டன் அல்லது ஒரு வண்டி தொழு எருஅல்லது கலவை எருவை (கம்போஸ்டு) அடியுரமாக இட்டு மண்ணில் நன்கு கலக்குமாறு கொத்தி விட வேண்டும்.

எருவிட்ட மண்ணின் மேல், முதலில்எடுத்த 1.5 அடி மண்ணைப் போட்டுச் சமப்படுத்த வேண்டும்.


விதைப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக 'செரசான்' என்ற பூஞ்சாள மருந்தை மண்ணில் கலந்து, பயிர்களை நோய்கள் தாக்காவண்ணம் தடுக்க வேண்டும்.

விதைப்பதற்கு 3 நாட்கள் முன்னதாக டி.டி.டி. மருந்தை மண்ணில் கலந்து எறும்புகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

**பட்டம்**

காய்கறி சாகுபடி செய்ய (1) ஜூலை-ஆகஸ்ட் (ஆடி), (2) ஜனவரி-பிப்ரவரி (தை) ஆகிய இரண்டும் முக்கிய விதைப்புப் பட்டங்களாகும்.

வீட்டிற்கு வேண்டிய காய்கறிகளை ஆண்டு முழுவதும் தொடர்ந்து பெற அட்டவணை-2 இல் கண்டபடி பயிரிடுவதே சிறந்ததாகும்.



அட்டவணை—2.

## ஆண்டு முழுவதும் காய்கறி பெறுவதற்குரிய வழிமுறை

| பாத்தி எண் | காய்கறிகளின் பெயர் | பயிர் செய்வதற்கான பட்டங்கள் |
|---|---|---|
| பாத்தி 1 | கத்தரி, முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | முட்டைகோஸ் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | வெண்டை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 2 | கொத்தவரை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | பீட்ரூட் | அக்டோபர் முதல் டிசம்பர் வரை. |
| | கீரை வகைகள் | ஜனவரி முதல் பிப்ரவரி வரை. |
| | தட்டைப்பயறு | மார்ச்சு முதல் மே வரை. |
| பாத்தி 3 | காராமணி, | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | கத்தரி, டர்னிப் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கொத்தவரை | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 4 | வெண்டை | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | தட்டைப்பயறு | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | முள்ளங்கி | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | கீரை வகைகள் | ஏப்ரல் முதல் மே வரை. |
| பாத்தி 5 | மிளகாய், முள்ளங்கி | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | வெண்டை | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கத்தரி, வெங்காயம் | பிப்ரவரி முதல் மே வரை. |
| பாத்தி 6 | பெல்லாரி, வெங்காயம் | ஜூன் முதல் செப்டம்பர் வரை. |
| | மிளகாய் | அக்டோபர் முதல் ஜனவரி வரை. |
| | கீரை வகைகள் | பிப்ரவரி முதல் மார்ச் வரை. |
| | முள்ளங்கி | ஏப்ரல் முதல் மே வரை. |

கீரை வகைகள், முள்ளங்கி, கத்தரி, வெண்டை, தக்காளி, கொத்தவரை ஆகிய வகைகளை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்.

அவரை, பூசணி, பாகல், புடலை ஆகியவைகளை ஜூலை- ஆகஸ்ட் (ஆடி), டிசம்பர்-ஜனவரி (மார்கழி) ஆகிய பட்டங்களில் விதைக்கலாம்.

முட்டைக்கோஸ், 'காலிபிளவர்', 'நூல்கோல்', 'பீட்ரூட்', 'கேரட்' ஆகியவைகளை அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கலாம்.

### விதைப்பு

கலப்பில்லாத, திடமான நல்ல முளைப்புத் திறன் உடைய விதைகளை விதைப்பதே சிறந்தது. விதைப்பதற்கு முன் விதைகளை 'அக்ரசான்' மருந்தில் கலந்து விதைக்க வேண்டும். கத்தரி, மிளகாய், தக்காளி, ஆகியவைகளை மேடான பாத்திகள் (Raised Beds) அமைத்து நாற்று விடுதலே சிறந்தது.

நாற்றுவிட மரப்பெட்டிகளையும் உபயோகிக்கலாம்.

கீரை போன்ற சிறிய விதைகளோடு எட்டு பாகம் மணலைக் கலந்து விதைத்தல் நல்லது.

நாற்றங்காலில் விதைகளைப் பரவலாக விதைப்பதே நல்லது.

வரிசைகளில் நாற்று விடுவதும் நல்லது.

விதைத்த விதைகள் முளைத்து வரும்போது, அவைகளைப் பறவைகள் தின்றுவிடாமல் தடுக்க, விதைப் பாத்திகளின் மேல் வைக்கோலைப் பரப்பி வைக்கலாம்.

விதைப் பாத்திகளுக்கு பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

ஒரு மாதத்திற்குப் பின் நாற்றுகளைப் பறித்து நடவு செய்தல் வேண்டும்.

நாற்றுகளைப் பறித்து நடுவதற்கு முன் நாற்றங்காலில் தாமிர பூசண கொல்லி மருந்து, என்ட்ரின் அல்லது பாரத்தியான் மருந்து ஆகியவைகளைத் தண்ணீரில் கலந்து தெளித்தல் நல்லது.


நாற்றுகளை வரிசை வரிசையாக நடுவதே சிறந்தது.

கிழங்கு வகைச் செடிகளுக்கு வரிசையில் செடிக்குச் செடி 1 அடி இடைவெளியும், வெண்டை, கத்தரி, தக்காளி ஆகியவைகளுக்கு 1.5 முதல் 2 அடி இடைவெளியும் விட்டு நடுதல் சிறந்தது.

### உரமிடுதல்

பொதுவாக எல்லாக் காய்கறி செடிகளுக்கும் (பூசணி ரகங்களைத் தவிர) ஒரு சதுர மீட்டருக்கு 50 கிராம் வீதம் இரசாயன உரங்கள் இடவேண்டும். அதில்,





அமோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அமோனியம் நைட்ரேட்—1 பங்கும்

சூப்பர் பாஸ்பேட்—2 பங்கும்

மூரியேட் ஆப் பொட்டாஷ்—1 பங்கும் கலந்திருக்க வேண்டும்.

சிறப்பாக நல்ல மகசூல் எடுப்பதற்கு அட்டவணை 4-இல் குறிப்பிட்டுள்ளது போல, குறிப்பிட்ட காய்கறிப் பயிருக்கு, குறிப்பிட்ட இரசாயன உரங்களைக் குறிப்பிட்ட அளவில் இட வேண்டும்.

அடிஉரத்தை, நாற்றுகளை நடுவதற்கு ஒருவாரம் முன்பாக இட்டுவிட வேண்டும்.

மேலுரமாக இரசாயன உரங்களை இட ஊடுழவு செய்யும் போது அல்லது களையெடுக்கும் பொழுது இடுவதே நல்லது. இரசாயன உரங்களை செடிகளினின்று 10 செ. மீ. தூரம் தள்ளி வைத்து அவைகளை மண்ணுடன் நன்முகக் கலக்குமாறு செய்ய வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுதல் அவசியம்.

பூசணி, புடலை, பீர்க்கு, பாகல், சுரை ஆகியவைகளுக்கு ஒரு குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கலவை எருவையும், அட்டவணை-4-ல் குறிப்பிட்டுள்ள உரங்களையும் விதைகளை நடுவதற்கு முன்பு இடவேண்டும். பூக்கும்பொழுது ஒரு குழிக்கு 12 கிலோ தொழு எரு இடுவது சிறந்தது.

**களை எடுத்தலும்**
**—மண் அணைத்தலும்**

மண்ணில் தகுந்த காற்றோட்டம் ஏற்பட்டு, செடிகள் நன்கு வளர களை எடுத்தல் அவசியம். களைகள் தோன்றிய உடனேயே அவைகளை அகற்றிவிட வேண்டும்.

களையெடுக்கும் போது செடிகளின் வேர்களுக்கு கெடுதி ஏற்படாமல் களையெடுக்க வேண்டும். கிழங்கு வகைப் பயிர்களுக்கு மண் அணைக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**

விதைகள் முளைக்கும்போது பூவாளியால் தண்ணீர் தெளிப்பதே நல்லது.

இளஞ்செடிகளுக்கு வாரத்திற்கு 2 அல்லது 3 முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

குறைந்த ஈரத்தன்மை, அதிக ஈரத்தன்மை ஆகிய இரு நிலைமைகளுமே செடிகளுக்குக் கெடுதல் விளைவிக்கக் கூடும். எனவே தண்ணீர் பாய்ச்சுவதற்கு முன்பே, மண்ணில் 5 முதல் 6 செண்டி மீட்டர் ஆழத்தில் உள்ள மண்ணின் நிலைமையை அறிந்து அதற்கேற்பத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியம்.

''கேரட்'' போன்ற வேர்க் காய்கறிப் பயிர்களுக்கு அறுவடைக்கு 15 நாட்கள் முன்னதாகவே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்தி விடுவது நல்லது. இவ்வாறு செய்வது கிழங்குகளுக்கு நல்ல சுவையையும், நல்ல நிறத்தையும் கொடுக்கிறது.

**பயிர்ப்பாதுகாப்பு**

விதைகளை விதைப்பதற்கு முன்பாக 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து கலந்து விதைக்க வேண்டும்.


செடிகளில் பூச்சிகளையோ அல்லது நோய்களையோ கண்டால் உடன் வேளாண்மைத் துறை அலுவலர்களுக்குத் தெரிவித்து, அவர்களிடமிருந்து தகுந்த தடுப்பு முறைகளை அறிந்து, அதன்படி, செய்யுங்கள்.


பூச்சிகள் வராமல் இருக்க, முன் தடுப்பாக 15 நாட்களுக்கு ஒரு தடவை 'என்ட்ரின்' அல்லது 'பாலிடால்' அல்லது 'ரோகார்' தெளிக்க வேண்டும். அது போலவே நோய்கள் வராமல் இருக்க முன் தடுப்பாக மாதமொருமுறை தாமிரப் பூசணக் கொல்லி மருந்து தெளிக்க வேண்டும்.

புடல், பாகல், பறங்கி, பீர்க்கு போன்ற பூசணி வகைக் காய்கறிச் செடிகளுக்கு டி.டி.டீ. (D. D. T.) அல்லது பி.எச்.சி. (B. H. C.) ஆகிய மருந்துகளைத் தூவுதலோ அல்லது தெளித்தலோ கூடாது.

பூசணி வகைக் காய்கறிச் செடிகளைப் பூச்சி தாக்கா வண்ணம் பாதுகாக்க 'லின்டேன்' தெளிக்க வேண்டும்.

காய்களை அறுவடை செய்வதற்கு 2 வாரத்திற்கு முன்பாகவே மருந்து தெளிப்பதையோ அல்லது மருந்து தூவுதலையோ நிறுத்திட வேண்டும்.





**எல்லா இடங்களையும் பயனுள்ள முறையில் சாகுபடி செய்தல்:**

வீட்டுத் தோட்டத்தின் எந்தப் பகுதியையும் வீணாகப் போடாமல் நன்கு பயன்படுத்தினால் மிகுந்த பலன் பெறலாம். திட்டமிட்டுப் பயிர் செய்தால், ஒரு அங்குல மண்ணைக்கூட வீணாக்காமல், பயன்படுத்தலாம்.

குறிப்பாக குடும்பத் தலைவிகள் வீட்டுத் தோட்டத்தில் ஆர்வம் கொண்டு ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கி எல்லா வேலைகளையும் செய்ய முயன்றால், ஒரு அங்குல இடத்தைக்கூட வீணாக்காமல் பயன்படுத்தி, காய்கறிகள் விளைவை அதிகப்படுத்த முடியும். வீட்டுத் தோட்டத்திலுள்ள நடைபாதைகள், மைய நடை பாதை, வரப்பின் ஓரங்கள், மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், உயிர் வேலிகள், கலவை எருக் குழிகள், நிரந்தரப் பயிர்கள் பகுதி ஆகியவைகளைப் பின்கண்ட முறையில் நன்கு பயன்படுத்தி, மிகுந்த பயன் பெறலாம்.

**நடைபாதை**

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றியுள்ள நடைபாதை, மைய நடைபாதை ஆகியவற்றின் ஓரங்களில் குறுகிய கால வயதுடைய பலவகைக் கீரைகளை வளர்க்க வேண்டும். அவ்வோரங்களில் தண்டுக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை, ஸ்பைனாஷ், புதினா' ஆகியவைகளைப் பயிரிடுங்கள். நடைபாதையின் ஒவ்வொரு ஓரத்திலும் ஒவ்வொரு வகைக்கீரை பயிரிடுங்கள். கீரைகளை வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

**மைய நடைபாதை**

மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்ட வரை படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், மைய நடைபாதையின் இரண்டு ஓரங்களிலும் செடிக்குச் செடி 2 முதல் 4 அடி இடைவெளிவிட்டு தக்காளிக் கன்றுகளை நட்டு வளருங்கள். தக்காளிச் செடிகளை தனிக்குச்சிகளில் இணைத்துக் கட்டி 4 முதல் 5 அடி உயரம் வரை வளர விடலாம்.

மைய நடைபாதையில் பன்னீர் திராட்சை (''மஸ்காட்''), ''அனாப்-இ-ஷாஹி' போன்ற திராட்சைகளின் பதியங்களை நடுங்கள். மையநடைபாதையின் மேல் ஓர் பந்தல் அமைத்து அதன் மேல் திராட்சைக் கொடியைப் படரவிடுங்கள்.

**வரப்பின் ஓரங்கள்**

இரண்டு முக்கிய பாத்திகளை நீண்ட வாக்கில் பிரிக்கும் வரப்புகளின் ஓரங்களில் கீரை வகைகள் முள்ளங்கி, வெங்காயம் போன்றவைகளைப் பயிரிடுங்கள்.

**தட்டிகள், வேலிகள்**

வீட்டுத் தோட்டத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள மூங்கிலால் செய்யப்பட்ட தட்டிகள், வேலிகள் அல்லது உயிர் வேலிகளில் பசலை, பாகல், பீர்க்கன், கோவைக் காய், சௌ-சௌ முதலிய கொடி வகைச் செடிகளை வளர்க்க வேண்டும். இவைகளையும் வெவ்வேறு பட்டங்களில் மாற்றி மாற்றிப் பயிரிடுங்கள்.

**கலவை எருக் குழிகள்**

காய்கறிச் செடிகளிலிருந்து விழும் காய்ந்த இலைகள், அறுவடைக்குப் பின் வெட்டப்பட்ட செடிகள், வீட்டில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றை அவ்வப்போது கலவை எருக் குழிகளில் (கம்போஸ்ட் குழிகள்) நிரப்பி, மண்ணால் மூடி எரு தயாரிக்கவும்.

கலவை எருக் குழிகளை மூடியுள்ள மேல் மண்ணிலேயே புடல், அவரை போன்ற விதைகளை ஊன்றலாம். அல்லது தொட்டிகளில் விதைகளை ஊன்றி கலவை எருக் குழிகளின் மேல் வைக்கலாம்.

கலவை எருக் குழிகளின் மேல் பந்தல் அமையுங்கள். அப்பந்தலின் மேல் புடல், அவரை போன்ற கொடிகளைப் படர விடுங்கள்.

**நிரந்தரப் பயிர்கள் பகுதி**

நிரந்தரப் பயிர்களுக்காக, வீட்டுத் தோட்டத்தின் பின் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழை, கறி வேப்பிலை, ஜாப்னா முருங்கை, தவசிக்கீரை அல்லது, செக்கூர் மணிஸ்' எனப்படும் உயிர்ச்சத்துக் கீரை (Multi-Vitamin Greens) மரவள்ளிக் கிழங்கு, கத்தரி, தென்னை ஆகிய நிரந்தரப் பயன்தரும் செடிகளை வளர்க்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும் இப்பகுதியில் ஒன்றிரண்டு பழச் செடிகளையும் வளர்த்தல் நல்லது. ஏனென்றால் பெரும்பாலான பழங்கள் குடற்பகுதிகளை நல்ல நிலையிலும், சுறுசுறுப்பாகவும் வைப்பதற்கு வேண்டிய திடப் பொருட்களைக் (Roughage) கொடுத்து உதவுவதுடன் உயிர்ச் சத்து (வைட்டமின்) 'ஏ' உயிர்ச் சத்து (வைட்டமின்) 'சி' தாது உப்புகள் ஆகியவற்றையும் கொடுக்கின்றன.

மேலும் வயது வந்த ஒவ்வொருவரும் நாள்தோறும் குறைந்தது 84 கிராம் (3 அவுன்சு) பழங்களை உண்ண வேண்டும் என்று ஊட்ட உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுவதால் நமக்குத் தேவையான பழங்களை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் பப்பாளியை நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம். பப்பாளி ஆண்டு முழுவதும் பழம் கொடுப்பதுடன், நமக்குத் தேவையான வைட்டமின் 'ஏ' யையும் கொடுக்கிறது.

நமக்குப் பலவகையிலும் பயன்படும் எலுமிச்சையையும், வைட்டமின் 'சி' நிறைந்த 'மேற்கு இந்திய செர்ரி' ( West-Indian Cherries ) போன்றவைகளையும் நிரந்தரப் பயிர்கள் பகுதியில் வளர்க்கலாம்.

நிரந்தரப் பயிர்களின் இடைவெளிகளில் சர்க்கரை வள்ளி, தட்டைப் பயறு, பீன்சு போன்றவைகளைப் பயிரிடலாம்.

வாழையின் நிழலில் ஓரிரண்டு சேனைக் கிழங்குகளையும் நடலாம்.

(தொடரும்.)

# நினைவாற்றல் மனிதனின் மாபெரும் சக்தி!

## மாணவர் அரங்கம்

**நா**ம் அன்றாடம் பல பத்திரிகைகளைப் படிக்கிறோம். ஆனால், நாம் படித்ததை மறவாமல் இருக்கிறோமா? அதைப்பற்றி மறுநாள் கேட்டால்கூட நமக்கு நினைவு இருப்பதில்லையே! படிக்கும்போது முக்கியமான செய்திகளை நாம் கிரகித்துக் கொள்ள வேண்டும். அந்தச் செய்திகள் பொது அறிவுச் செய்திகளாக இருக்கும். அவை என்றைக்கும் நமக்குப் பயன்படும். எனவே, படித்ததை மறவாத தன்மையை நாம் பெற வேண்டும்.

நல்ல நல்ல விஷயங்களை மனத்தில் பசுமரத்தாணி போல் பதித்துக் கொள்கின்ற பழக்கம் நமக்கு இயல்பாய் அமைதல் வேண்டும். அதற்கேற்ப நம்மை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

'பகல் உண்டதே மறந்துவிடும்போது, என்றோ படித்தது எப்படி நினைவுக்கு வரும்?' என்று கேட்பது நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால், நம் அறிவு வளர்ச்சிக்கு அது நல்லதல்லவே!

நீங்கள் ஒரு ஞாபக மறதிப் பேராசிரியராக இருப்பதைவிட, ஞாபகம் உள்ள சாதாரண மனிதனாக இருப்பதே மேல் அன்றோ?

என்றோ நடந்ததை இன்று அப்படியே கூறும் நினைவு ஆற்றல் படைத்தவனை எல்லாரும் விரும்புவர்; பாராட்டுவர். நினைவாற்றல் என்பது மனிதனுக்குக் கிடைத்த மாபெரும் சக்தி. அந்தச் சக்தி இல்லாதவன் வெறும் மனிதன்; முழு மனிதனல்ல!

உங்கள் நினைவாற்றல் சரியாக இருக்கிறதா என்பதற்கு ஒரு சோதனை. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைகள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்றோ, எப்போதோ பத்திரிகைகளிலோ, நூல்களிலோ படித்திருக்கலாம். அவற்றை இப்போது நினைவுப்படுத்தி, சரியான விடை சொல்லத் தெரிகிறதா, பாருங்கள்!

**வினாக்கள் :**

1. இந்தியா-பாகிஸ்தான் இரயில்வே தொடர்பு மீண்டும் எப்போது துவங்கியது?

2. அமெரிக்கா, செவ்வாய் கிரகத்தில் செலுத்திய ராக்கெட்டின் பெயர் என்ன?

3. 21- வது ஒலிம்பிக் போட்டி எங்கே, எப்போது நடந்தது?

4. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தினால் கௌரவிக்கப்பட்ட முதல் இந்தியர் யார்?

5. ஐ. நா. சபையின் முதல் பெண் தலைவர் யார்?

6. 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற பட்டம் பெற்ற தமிழ் அறிஞர் யார்?

7. சாகித்திய அகாடெமி (Sahitya Academy) எப்போது முதல் செயற்பட்டு வருகிறது?

8. சாரணர் இயக்கம் யாரால், எப்போது தொடங்கப் பெற்றது?

9. கீழ்க்காணும் ஐ. நா. சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சுருக்கப் பெயர்கள், எதைக் குறிக்கின்றன?
   (அ.) ஐ. எல். ஓ. (I.L.O)
   (ஆ.) எஃப். ஏ. ஓ. (F.A.O)
   (இ.) ஐ. டி. ஏ. (I.D.A)
   (ஈ.) ஐ. டி. யூ. (I.T.U)

10. சாய்ந்த கோபுரம் (Leaning Tower) எங்கே உள்ளது? அதைக் கட்டும்போதே சாய்வாகக் கட்டினார்களா?

**விடைகள் : 48- ஆம் பக்கம்**




## மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதில் உள்ள குறைகளைத் தீர்க்க தமிழக அரசு ஏற்பாடு!

**வி**ரைவான முறையில் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகவும், உதவிப்பணம் வழங்குவதிலும், அதற்கான ஆணைகள் செல்வதிலும் ஏற்படும் தாமதம் பற்றிய குறைகளைத் தீர்ப்பதற்காகவும் அரிசன மற்றும் மலைவாழ் மக்கள் நல இணை இயக்குநரைத் தொடர்பு அலுவலராக தமிழக அரசு நியமித்துள்ளது. மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்கும் தொடர்புடைய அனைத்துப்பணிகளுக்கும் இவ்வலுவலரே பொறுப்புடையவராக இருப்பார்.

உதவித்தொகை வழங்குவதில் தாமதம் மற்றும் இதர குறைபாடுகள் இருப்பின் மத்திய, மாநில அரசு அலுவலகங்களை அணுகுவதற்குப் பதிலாக மாணவர்கள் அதனை எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அரிசன மற்றும் மலைவாழ்-மக்கள் நல இணை இயக்குநரிடம் தெரிவிக்கலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?



# அம்மை நோய்

பல நூற்றுண்டுகளாக உலகத்தில் உள்ள மிகக் கொடுமையுான நோய்களில் ஒன்று அம்மை நோய்.

ஐரோப்பாவில் 18-வது நூற்ருண்டில் பிறந்த குழந்தைகளில் 20 சதவிகிதம் அம்மை நோயினுல் இறந்துவிட்டன.

1796-இல் எட்வர்ட் ஜென்னர், அம்மை நோய்க்கான 'வாக்சின்' மருந்தைக் கண்டு பிடித்தார்.

'வைரஸ்' எனப்படும் நுண்கிருமிகளால் அம்மை நோய் ஏற்படுகிறது.

தும்மல், இருமல் மூலம் இந்நோய் பரவுகிறது. தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளாத ஒருவர், அம்மை நோயினுல் பீடிக்கப்பட்டு உள்ளவரின் அருகில் சென்று, காற்றை சுவாசித்தால், 7-லிருந்து 17 நாட்களுக்குள் அவருக்கும் அம்மை நோய் பீடிக்கும்.

இரண்டு முதல் 4 நாள் காய்ச்சலில் உடல் முழுவதும், குறிப்பாக, முகம், கைகள், கால்களில் அம்மை பூரித்துவிடும்.

அம்மை நோயினுல் பீடிக்கப்படுவோரில் 15 முதல் 30 சதவிகிதத்தினர் இறந்துவிடுகின்றனர். இந்நோயில் பிழைப்பவர்களுக்கு உடல் ஊனம் ஏற்படுகிறது. அல்லது கண் பார்வை இழந்துவிடுகிருர்கள்.

இந்நோயைக் குணப்படுத்த மருந்து கிடையாது. இருந்தாலும் தக்க நேரத்தில் மருத்துவ சிகிச்சை அளித்தால் நோய்முற்ருது.

குழந்தை பிறந்தவுடன் அதற்கு அம்மை நோய்த் தடுப்பு ஊசி போடுவதன் மூலமாகவும், பின்னர் அவ்வப்போது தடுப்பு ஊசிபோடுவதன் மூலமாகவும் இந்நோய் வராமல் தடுக்கலாம்.

இந்தியாவில் ஒவ்வொரு மணியிலும் சராசரியாக 6 பேர் அம்மை நோயினுல் பீடிக்கப்படுகின்றனர்.

அவர்களில் மூன்றில் ஒருவர் இறந்துவிடுகின்றனர்.

1956-ஆம் ஆண்டிலிருந்து 1975-ஆம் ஆண்டு வரை இந்தியாவில் 11,28,286 பேர் இந்நோயினுல் கஷ்டப்பட்டுள்ளனர். அதாவது சராசரியாக நாள்தோறும் 144 பேர் இந்நோயினுல் பீடிக்கப்பட்டனர். 1973-இல் தான், மிக அதிக அளவுக்கு மக்கள் இந்நோயினுல் பாதிக்கப்பட்டனர்.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்தியாவில் இந்நோயினுல் எவரும் பாதிக்கப்படவில்லை.

இருந்தாலும் தொடர்ந்து அம்மை நோய் பற்றி கண்காணிக்கப்படுகிறது.

அம்மை நோய் பற்றி முதலில் தெரிவிக்கும் நபருக்கு 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு அளிக்கப்படுகிறது. ஒரு இலட்சம் பணியாளர்கள் அம்மை நோய் பீடித்துள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

காய்ச்சல், உடல் அரிப்பு போன்றவற்ருல் பல நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்ட போதிலும் அவர்களை அம்மை நோய் பீடிக்கவில்லை.

''பொன்னுக்கு வீங்கி'', சிறிய அம்மை நோய், சொறி போன்ற நோய்களும் வைரஸ் என்னும் நுண்கிருமிகளால் பரவுகின்றன.

உடல் அரிப்புடன் கூடிய காய்ச்சல் ஏற்பட்டால், உடனடியாகச் சுகாதார அலுவலர்களிடம் அறிவிப்பது நலமாகும். இதனுல் மேலும் நோய் பரவாமல் தடுத்துவிடமுடியும்.

# அம்மை நோய் அறவே ஒழிந்த ஆண்டு நிறைவு விழா!

இந்த ஆண்டு ஜூலை 5-ஆம் தேதியன்று அம்மை நோயிலிருந்து விடுதலை பெற்ற ஓராண்டை இந்தியா பூர்த்தி செய்துள்ளது. இந்த நாள், ''அம்மை நோய்த் தடுப்புக்கு எச்சரிக்கை'' என்ற கருத்தில் நாடெங்கிலும் அனுசரிக்கப்பட்டது.

இந்த அருஞ்செயல் ''செயற்கைக்கோள் ஏவுவதை விட முக்கியத்துவத்தில் சற்றும் குறைந்ததல்ல'' என்று மத்திய நல்வாழ்வு குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் வர்ணித்தார்.

இந்தச் சாதனையைப் பாராட்டிய உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் ஹாஃப்தன் மேலர், ''சாதிக்க முடியாததை இந்தியா சாதித்துவிட்டது; அம்மை நோயின் முதுகெலும்பை அது முறித்துவிட்டது. இது ஒரு சரித்திரச் சாதனையாகும்; முழு உலக அம்மை நோய் இயக்கத்தின் மாபெரும் வெற்றிகளில் ஒன்றாக இது விளங்குகிறது'' என்று கூறினார்.

1974-ஆம் ஆண்டின் இறுதிவாக்கில் கூட மொத்தம் 1,88,003 பேர் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டதாகவும், 31,262 பேர் அதனால் இறந்து போனதாகவும் அறிவிக்கப்பட்டது. இந்த உண்மையிலிருந்து, இப்பொழுது அடைந்துள்ள சாதனையின் அளவை நன்கு மதிப்பிட முடியும்.

1962-ல் துவக்கப்பட்ட தேசிய அம்மை ஒழிப்புத் திட்டம், பொதுமக்களுக்கு அம்மைத் தடுப்பு ஊசி போடுவதற்குத் துவக்கத்தில் முக்கியத்துவம் அளித்தது. இதனைத் தொடர்ந்து அம்மை நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, அந்நோய் மேலும் பரவாமல் தடுப்பது சம்பந்தமான மிகத் தீவிரக் கொள்கையை அது மேற்கொண்டது.

தொடர்ந்து கண்காணிப்பதும், தகவல் திரட்டித் தருவதும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதில் இன்னொரு முக்கிய அம்சமாகும். அம்மை நோய் கண்ட வீடுகளில் காவலரைப் பயன்படுத்துவது, இந்நோயுடன் காய்ச்சல் கொண்டிருப்பவர் பற்றிய விவரங்களைப் பதிவு செய்வது, அம்மை நோய் பற்றி அறிவிப்பவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை 25 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தியது ஆகியவை இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முக்கியமானவைகளாகும்.

அம்மை நோய் இல்லாத நிலைமையை அடைந்திருப்பது இந்நோயை ஒழிப்பதன் முதல் கட்டமாகும். இரண்டாண்டு காலத்துக்கு நாட்டில் எவரும் அம்மை நோயால் பாதிக்கப்படாமல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், 1977-ல் அம்மை நோயை ஒழித்துவிட்டதாக நாம் கூற முடியும்.

இது, தேச முழுதும் பெருமிதம் கொள்ளக்கூடிய சாதனையாகும் என்று மத்திய நல்வாழ்வு, குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் கரண்சிங் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றில் கூறியுள்ளார். அம்மை ஒழிப்பு இயக்கம் திறமையாக மேற்கொள்ளப்பட்டதையும், இந்த இயக்கத்துக்கு முழு வெற்றி தேடித் தந்துள்ள சுகாதார ஊழியர்களின் அயராத கண்காணிப்பையும் மத்திய அமைச்சர் புகழ்ந்துள்ளார்.

''கடந்த ஓராண்டு காலத்தில் நாட்டில் எவருக்கும் அம்மை நோய் வரவில்லை என்பது மகிழ்ச்சியளிக்கிறது; அம்மை ஒழிப்புக்கான நமது இயக்கம் எவ்வளவு திறமையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதை இது காட்டுகிறது. இந்த இயக்கத்தில் பங்கு கொண்ட நாடெங்கிலுமிருக்கும் ஆயிரக்கணக்கான சுகாதார ஊழியர்களைப் பாராட்டுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறேன். மேலும் ஓராண்டு காலத்திற்கு நாம் தொடர்ந்து விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது. அதன் பிறகு, வருங்காலம் அனைத்திலும் அம்மை நோயிலிருந்து விடுதலை பெற்றவர்களாக நாம் இருப்போம்'' என்று அம்மை நோயிலிருந்து முழுதும் விடுபட்ட முதலாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் டாக்டர் கரண்சிங் குறிப்பிட்டுள்ளார்.


## "தமிழரசு" படியுங்கள்!

தமிழ்நாடு அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும், நவீன வேளாண்மை முறைகளையும், இதர துறைகளின் பணிகளையும் அறிந்து கொள்ளவும் ''தமிழரசு'' படிக்கத் தவறாதீர்கள். ''தமிழரசு'' இதழ் தவறாமல் கிடைக்க உடனே சந்தாதாரராகச் சேரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.


**சந்தா விவரம்**

ஆண்டுச் சந்தா — ரூபாய் 12.00
6 மாதச் சந்தா — ரூபாய் 6.00
தனி இதழ் — 50 காசு

**சந்தா அனுப்பவேண்டிய முகவரி**

**பொது நிருவாக மேலாளர்**
**(Circulation Manager),**
**''தமிழரசு'' அலுவலகம்**
**அரசினர் தோட்டம்**
**சென்னை — 600 002.**

# கப்பல் மாலுமிகளுக்குத் தேர்வு நிலையம்



கடலில் பயணம் செய்கின்றவர்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், அவர்களின் உயிருக்கு எந்தவித ஊறும் நேர்ந்திடா வண்ணம் பார்த்துக் கொள்ளவும் இந்திய அரசு 1958-ஆம் ஆண்டில் கப்பல் போக்குவரத்துச் சட்டத்தினை உருவாக்கியது. தற்பொழுது இந்தியக் கப்பல்களில் பயணம் செய்கின்ற மாலுமிகள், கப்பல் பயணத்திலும், இயந்திரங்களிலும் பொறுப்பேற்றுள்ள அலுவலர்கள் போன்றவர்கள் குறிப்பிட்ட தரத்தில் தகுதிச் சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும் என இச்சட்டம் வற்புறுத்துகிறது. தகுதிச் சான்றிதழ்களில் ஏறத்தாழ 12 தரங்கள் (Grades) உள்ளன. இச்சான்றிதழ்களின் தரம் கப்பலினுடைய வகை, அளவு, அது ஏற்றிருக்கும் வாணிபத்தின் வரையறை போன்றவைகளைக் கொண்டு பிரிக்கப்பெறுகின்றது.

இந்தச் சான்றிதழ்கள் மைய அரசால் வழங்கப்படுகின்றன. இதற்கென நியமிக்கப் பெற்றுள்ள தேர்வாளர்களால் நடத்தப்படுகின்ற குறிப்பிட்ட தேர்வில் தேர்ச்சி பெற்ற பின்னரே சான்றிதழ்கள், வழங்கப்படும். இங்கிலாந்து நாட்டின் தொடர்புடைய ஏனைய நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் நம் நாட்டின் தேர்வுத் தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. இந்தச் சான்றிதழ் தேர்வு, பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டின் தேர்வு வகையை அடிப்படையாகக் கொண்டதாகும். சான்றிதழ்தாரர்கள் தகுதி வாய்ந்தவராக இல்லையெனப் பொறுப்பாளர்களால் அறியப்பட்டால் அவர் பெற்றிருக்கும் சான்றிதழை நீக்கவோ ரத்துச் செய்யவோ அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

இத்தகு சிறப்பு வாய்ந்த தகுதிச் சான்றிதழ் தேர்வு நிலையங்கள் இந்தியாவில் பம்பாய், கல்கத்தா ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் செயல்பட்டு வந்தன. நம்முடைய வாணிபத்திற்குப் பயன்படும் கப்பல்கள் பெருகி வருவதாலும், முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளின் கப்பல் நிறுவனங்கள் இத்தகு சான்றிதழ் தாரர்களைக் கவர்ந்திழுப்பதாலும் சான்றிதழ் பெற்றுள்ள கப்பல் அலுவலர்களின் தேவையும் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டு வருகின்றது.

பம்பாய், கல்கத்தாவிலுள்ள தேர்வு நிலையங்கள் சிறப்பான முறையில் இயங்கி வந்தாலும், மூன்றாவதாக சென்னை மாநகரில் தேர்வு நிலையம் ஒன்றினை ஏற்படுத்திட வேண்டுமென மைய அரசின் 'மாலுமிகள் பயிற்சி வாரியம்'' முடிவெடுத்தது. எனவே, இந்த முடிவும் செயல்படுத்தப் பெற்று, சென்னையில் குறிப்பிட்ட சில தரங்களுக்கான தேர்வு 7-7-'76-ஆம் நாளில் துவங்கியது. இது இந்தியாவின் மூன்றாவது தேர்வு நிலையமாக இருந்தாலும், தென்னிந்தியாவின் முதல் தேர்வு நிலையம் என்பதும் பெருமைப்படத்தக்க ஒன்றாகும். தற்பொழுது துவக்கப் பெற்றுள்ள இத்தேர்வு முதல்படியாக இருப்பதால் மிகவும் கடினமானதாகவே இருக்கும்.

சென்னையில் இத்தேர்வு நிலையம் திறக்கப் பெற்றது மிகச் சிறந்த செயலாகும்-ஒப்பற்ற முயற்சியாகும். 1958-ஆம் ஆண்டு கப்பல் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் நகரில் அளிக்கப்பெறும் ஒவ்வொரு பணியையும் சென்னை கப்பல் போக்குவரத்துத் துறை கவனித்துக் கொள்கிறது. கூடுதலாக இத்தேர்வு நடத்தும் பணியிலும் இந்தத் துறையே ஈடுபடும்.

சென்னையில் துவக்கப் பெற்றுள்ள இந்தத் தேர்வு மையம் தென்னிந்தியாவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்குப் பரந்த அளவில் பயனளிக்கும். மற்ற நிலையங்களில் இடம் பெற முடியாதவர்களுக்கு இங்கு இடம் கிடைத்திட வாய்ப்புண்டு! தேர்வுகள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும். தென்னிந்தியாவில் மீன் பிடி தொழில் மிகுந்த அளவில் இருப்பதாலும், மீன் பிடி பயிற்சி நிலையங்கள் பரந்த அளவில் காணப்படுவதாலும் கப்பல் மாலுமிகளுக்கு இந்தத் தேர்வு நிலையம் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

சென்னையில் இத்தேர்வு மையத்தினை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு. எம்.ஜி. ராஜாராம் அவர்கள் 7-7-'76-ல் துவக்கி வைத்தார். பெருஞ்சிறப்பு வாய்ந்த இந்த மையம் சென்னை மாநகரில் துவக்கப் பெற்றிருப்பது அனைவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கும் என்றால் அது மிகையாகாது.

— ஆயிரராமன்



காதி கிராப்ட்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர்– ''பனை''
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்;
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஓ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்-
பொருட்கள்.
பதநீர்
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை-600 001
KK/380 TAM



# கால்நடைகளின் உணவும், உணவிடும் முறைகளும்

டாக்டர் இரா. வெங்கிட கிருட்டினன்,
பேராசிரியர், விலங்கின ஊட்டச்சத்துத் துறை.
கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை.

பழங்காலத்தில், நம் மக்கள் கால்நடைகளை நன்கு உணவிட்டுப் பராமரித்து வந்தனர். அவ்வாறு அவர்கள் செய்யும்போது, தங்கள் அனுபவத்தின் அடிப்படையிலும் பழக்க வழக்கங்களை அனுசரித்தும் தீவன முறையைக் கடைப்பிடித்தனர். இம்முறை, பயனளிப்பதாய் இருந்தாலும், இதில் சில குறைபாடுகள் இருந்தன. சிலவற்றிற்கு, தேவைக்கு அதிகமான உணவும், அதே நேரத்தில் சிலவற்றிற்கு தேவைக்குக் குறைவான உணவும் அளிக்கப்பட நேர்ந்தது.

கால்நடை உணவியலில் கண்ட ஆராய்ச்சிகளின் விளைவாய், விஞ்ஞான ரீதியாக கால்நடைகளின் உணவியல் முறை மாற்றி அமைக்கப்பட்டது. இதன் விளைவாக, கால்நடைகளின் தீவன முறையில் உணவு மிச்சமும் இலாபமும் கிடைக்க வழிபிறந்தது.

**கால்நடைகளுக்கு உணவு இடும் முறைக்கு சில குறிப்புகள் :**

1. **தாராளமாக உணவிடுதல்**—இப்படிக் கூறுவதால் வீணடிப்பதை அனுமதிக்கவில்லை. திருப்தியான முறையில் உணவளிக்க வேண்டும்.

2. **தனிப்பட்ட முறையில் கவனிக்கவும்**: ஒவ்வொரு மாடும் தனி இயல்பு உடையது. ஆதலால் அதன் தரத்திற்கு ஏற்ப உணவிடல் வேண்டும்.

3. **சரியான சமன் உணவு:** சமன் உணவு என்பது, தேவையான எல்லாச் சத்துக்களையும் தகுந்த அளவில் குறைபாடின்றி அளிப்பது ஆகும்.

4. **திடீர் மாற்றங்களைத் தவிர்த்தல்** : கால்நடைகளின் அன்றாட உணவிடு முறையில் திடீரென்று மாற்றங்களைச் செய்வது கெடுதல். எந்த மாற்றமும் படிப்படியாகப் புகுத்தப்படல் வேண்டும்.

5. **தாராளமான பசும் தீவனம்** : பொதுவாகக் கால்நடைகளுக்குப் பசுந்தீவனம் தாராளமாய் அளிக்க வேண்டும்.

**உணவு வகைகள் :**

கால்நடைகளின் இயல்பு, அவைகளின் இனம் இவற்றிற்குத் தகுந்தாற்போல், உபயோகப்படுத்தப்படும் உணவுகள் வேறுபடுகின்றன. பொதுவாக, கீழ்க்கண்ட உணவுகள் பெரும்பாலும் கையாளப்படுகின்றன :

(1) பிண்ணாக்குகள், (2) எண்ணெய் வித்துக்கள், (3) தவிடு, (4) தானிய வகைகள், (5) பருப்பு வகைகள், (6) பொட்டுகள் முதலியவை. இவற்றுடன் கோழி, பன்றி இவைகளின் உணவில், சில சமயங்களில் மீன் தூள், வெல்லப்பாகு போன்ற பொருட்களும் உபயோகமாகின்றன.

மாடுகள், குதிரைகள், ஆடுகள் போன்றவைகளுக்கு வைக்கோல், காய்ந்த புல், பச்சைப் புல் இவைகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**உணவின் அளவு :**

உணவின் அளவு கணக்கிடப்படும்போது, ஒரு நாளைக்குத் தேவையான சத்துணவு அடிப்படையில், கணக்கிடப்படுகிறது.

தேவை என்னும்போது, எந்தப் பிராணிக்கும் உணவின் தேவை இருவகையாகிறது. ஒன்று அதன் உடலைப் பேணி வளர்ப்பதற்கும், இரண்டாவது, அத்துடன் உற்பத்தி செய்வதற்கும் உணவு தேவைப்படுகிறது. உற்பத்தி என்று நோக்குமிடத்து, பால், முட்டை இவை மட்டுமின்றி வேறு பிறவும் இதனுள் அடங்குகிறது. ஆடுகளின் கம்பள உற்பத்தியும், மாமிசத்திற்காக வளர்க்கப்படும் ஆடு, பன்றி, கோழி இவைகளின் மாமிச உற்பத்தியையும் கூடச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஒரு நாளைக்கு அளிக்கப்படும் உணவு கீழ்க்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :


1. பிராணிகளின் பசியைத் தீர்க்க வேண்டும்.

2. புரதம், மாவுச்சத்து, கொழுப்பு போன்ற எல்லாச் சத்துணவுகளையும் அது நிறைவாகக் கொடுக்க வேண்டும்.

3. அத்துடன் உடல் வளர்ச்சிக்கும், உற்பத்திக்கும் தேவையான உலோகச் சத்துக்களை அளிக்க வேண்டும்.

4. தேவையான வைட்டமின்களை அந்த உணவு தர வேண்டும். இதில் தேவையைப் பொறுத்த மட்டில் பிராணிகளிடையே வேறுபாடு உள்ளது. மாடுகளுக்கும், ஆடுகளுக்கும், குதிரைகளுக்கும், 'பி' வைட்டமின்களை உணவில் தர வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அவைகள், தங்கள் உடல் உறுப்புகளில் இவைகளை உற்பத்தி செய்து கொள்கின்றன. இவைகளுக்கு முக்கியமாய் 'ஏ' வைட்டமின் அளிக்கப்படவேண்டும். பசும் புல் மற்றும் பசும் தீவனங்கள் நிறையக் கொடுத்தால் அவைகளிலிருந்து 'ஏ' வைட்டமின் தேவை பூர்த்தியாகிறது.

பன்றி, கோழி இவைகளுக்கு எல்லா வைட்டமின்களும் தரப்படவேண்டும்.



நன்கு உணவு அளித்து நன்முறையில் பராமரிக்கப்பட்டால், நான் தருகின்றேன் நிறையப் பால்!

**உணவிடும் முறை :**

எந்தப் பிராணிக்கும் உணவிடும் முறையின் அடிப்படை ஒன்றுதான். அவற்றின் உடலுக்கும், அதற்கு மேல் அவை தரும் உற்பத்திப் பொருளுக்கும் தேவையான சத்து உணவை அளிக்க வேண்டும்.


எது எவ்வாறு சாத்தியமாகிறதென்றால், இரண்டு முக்கிய விவரங்களை நாம் அறிய வேண்டும்.

1. கால்நடைகளின் தேவை. தேவையென்றால், தேவைப்படும் புரதம், கொழுப்பு, சக்தி, மற்ற உலோகப் பொருள்கள் முதலியவை.

2. நம்மிடம் உள்ள அல்லது நமக்குக் கிடைக்கக் கூடிய பொருள்களில் உள்ள சத்து விவரங்கள். இவ்விரண்டு குறிப்பைக் கொண்டு, தேவையான உணவுப் பொருட்களைத் தகுந்த அளவில் கலந்தளிக்க வேண்டும்.

உலோகச் சத்துக்களை அளிக்கும் வகையில் ஏதாவது தகுந்த மினரல் உப்புக் கலவையைத் தகுந்த அளவில் சேர்க்கலாம்.

கால்நடைகளின் உற்பத்தி பெருக, கன்றுகளைப் பேணிக் காக்க வேண்டும்!



**கால்நடைகளுக்கு உணவு முறை :**

கால்நடைகள் எனும்போது நாம் பெரிது கவனம் கொள்வது பசுக்களும், அடுத்து எருமைகளும். ஏனென்றால், பால் உற்பத்தி ஒரு முக்கிய நோக்கமாகும்.

பசுக்களுக்கோ அல்லது எருமைகளுக்கோ உணவிடும்போது அவற்றின் உடல் தேவை, அத்துடன் அவை கொடுக்கும் பால் பெருக்கத்தின் தேவை இரண்டும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில், பசுக்களுக்கும், எருமைகளுக்கும் கொடுக்கப்படக் கூடிய சில உணவு முறைகள் தரப்பட்டுள்ளன. இவை சில உதாரணங்களே; நிலைமைக்கேற்ப இவை மாறுபடலாம்.

பசு :

உடல் எடை 400 கிலோ.
பால் தரும் அளவு 8 கிலோ.

தீவனம் :

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணுக்கு | ... | 1.0 கிலோ |
| பருத்திக் கொட்டை | ... | 0.5 கிலோ |
| கொண்டைக் கடலைப் பொட்டு | ... | 0.5 கிலோ |
| தவிடு | ... | 1.00 கிலோ |
| பசும் புல் | ... | 10.00 கிலோ |
| வைக்கோல் | ... | 5.00 கிலோ |
| இத்துடன் மினரல் உப்புக் கலவை | | 2 அவுன்ஸ் |
| சாதாரண உப்பு | | 2 அவுன்ஸ் |

சேர்க்கப்பட வேண்டும்.

எருமை :

உடல் எடை—450 கிலோ.
பால் தரும் அளவு—10 கிலோ.

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணுக்கு | ... | 2 கிலோ |
| கடலை | ... | 0.5 கிலோ |
| தவிடு | ... | 1.0 கிலோ |
| பொட்டு | ... | 2.0 கிலோ |
| பசும் புல் | ... | 10.0 கிலோ |
| வைக்கோல் | ... | 5.0 கிலோ |
| இத்துடன் மினரல் உப்புக் கலவை | | 2 அவுன்ஸ் |
| சாதாரண உப்பு | ... | 2 அவுன்ஸ் |

பால் தராத பசு :

| | | |
|---|---|---|
| கடலைப் பிண்ணுக்கு | ... | 0.5 கிலோ |
| கடலைப் பொட்டு | ... | 0.5 கிலோ |
| பசும் புல் | ... | 10.0 கிலோ |
| வைக்கோல் | ... | 5.0 கிலோ |


கன்றுகள் பராமரிப்பு :

இளம் கன்றுகளைச் சரிவரப் பராமரிக்கவேண்டும். இல்லாவிடில், அவைகள் பிற்காலத்தில் நல்ல பசுவாகவோ, காளையாகவோ வளரா. முதல் மூன்று நாட்களுக்கு கன்றுகளுக்குச் சீம்பால் அவசியம் தர வேண்டும். சீம்பால் முக்கிய சத்துப் பொருள்கள் நிறைந்தது. சுலபமாக ஜீரணமாகக் கூடியது.

கீழ்க்கண்ட அட்டவணைப்படி உணவளிக்கலாம்:

| கன்றின் வயது | உணவு அளிக்க வேண்டிய விவரம் |
|---|---|
| 1—2 வாரம் | தாய்ப் பசுவின் பாலே உணவு. |
| 2—3 வாரம் | பசுப்பால் கொடுக்கலாம் (10 கிலோ உடல்எடைக்கு 1 கிலோ பால்). |
| 3—4 வாரம் | 60 அவுன்ஸ் பால், 20 அவுன்ஸ் கஞ்சி. |
| 4—6 வாரம் | பாலைச் சிறுகச் சிறுகக் குறைத்துக் கஞ்சியை அதிகரிக்கவும். |
| 6—7 வாரம் | கஞ்சியின் அளவை அதிகரிக்கவும்; 80 முதல் 100 அவுன்ஸ் |
| 7—8 வாரம் | கஞ்சியைக் குறைத்து, சத்துணவு அளிப்பதற்குப் பிண்ணுக்கு, தவிடு போன்றவை சிறிதளவு தரவும். |
| 8 வாரத்திற்குப் பிறகு | பிண்ணுக்கு, தவிடு போன்றவைகள் கலந்த உணவும், பசும் புல்லும் போடலாம். |

சினைக் காலத்தில் தாய்ப்பசுவுக்கு நல்ல உணவு அளிக்கப்பட்டதால், கன்றும் வளமாக உள்ளது!





நன்கு பராமரிக்கப்படாத நான் வீட்டிற்கும் நாட்டிற்கும் நட்டத்தையே ஏற்படுத்துவேன்!

கீழ்க்கண்ட முறைப்படி தீவனக் கலவையைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இக்கலவையைக் கஞ்சியாகவோ அல்லது கடின உணவாகவோ கன்றுகளுக்கு அளிக்கலாம். கீழ்க்கண்ட கலவையைக் கஞ்சியாகத் தரும் போது, ஒரு பாகம் கலவைத் தீவனத்திற்கு 4 முதல் 5 பாகம் தண்ணீர் கலந்து, கஞ்சியாக்க வேண்டும்.

**கலவைத் தீவனம் :**

| | | |
|---|---|---|
| மக்காச் சோளம் | ... | 39 பங்கு |
| கடலைப் பிண்ணாக்கு | ... | 40 பங்கு |
| தவிடு | ... | 12 பங்கு |
| மரவள்ளிக் கிழங்கு மாவு | ... | 5 பங்கு |
| மீன் தூள் | ... | 3 பங்கு |
| உலோக உப்புக் கலவை | ... | 2 பங்கு |
| வைட்டமின் கலவை | | 1 கிராம்-ஒரு கிலோவிற்கு |

நன்றாகப் பராமரிக்கப்பட்ட கன்றுகள் தான், பிற்காலத்தில் சிறந்த மாடுகள் ஆகின்றன.

வயது வந்த கன்று (1 வயது முதல் 2 வயது வரை) கீழ்க்கண்ட தீவனமளிக்கலாம் :

தவிடு—1 பாகம்
கடலை நொறுக்கியது—2 பாகம்

இதில் கன்றுக்கு 0.5 முதல் 1 கிலோ வீதம் கொடுக்கலாம். இத்துடன் நல்ல பசும் புல் தேவையான அளவு தர வேண்டும். பசும் புல் 5 கிலோ முதல் 8 கிலோ வரை தரலாம்.

**ஆடுகளுக்கு உணவிடுதல் :**

பொதுவாக ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சல் இருக்க வேண்டும். மேய்ச்சல் வசதி குறைவான இடங்களில், பசும் புற்களை அறுத்துக் கொண்டுவந்து போட வேண்டும்.

நல்ல மேய்ச்சல் வசதி இருக்கும் நேரத்தில் கீழ்க்கண்ட தீவனக் கலவையில் 0.5 முதல் 1 கிலோ வரை கொடுக்கலாம்.

தவிடு— 1 பாகம்
கடலை நொறுக்கியது— 2 பாகம்

மேய்ச்சல் வசதி இல்லாத நேரத்தில் கீழ்க்கண்டவாறு உணவளிக்கலாம் :


**பன்றிகள் உணவு முறை :**

சாதாரணமாகப் பன்றிகள் மாமிசத்திற்காக வளர்க்கப்படுகின்றன. ஆகையால் அவை நன்றாக வளர்ச்சி பெற்று, நிறைய மாமிசம் கொடுப்பவையாக வளர வேண்டும்.

**தீவனக் கலவை :**

| | |
|---|---|
| மக்காச் சோளம் | —6 பாகம் |
| கோதுமைத் தவிடு | —3 பாகம் |
| கடலைப் பிண்ணாக்கு | —1 பாகம் |

இதில் 0.5 முதல் 1 கிலோ வரை கொடுக்க வேண்டும். அத்துடன் 2 அல்லது 3 கிலோ புல்லும் தேவை.



கவனிப்பாரற்ற நிலையில் கண்டதைத் தின்று வாழும் என்னால், நிமிர்ந்துகூட நிற்க முடியவில்லை. நானெப்படி நல்ல பயன் தரமுடியும்?

**தீவனக் கலவை :**

| | |
|---|---|
| தானியம் (சோளம்) | —60 பங்கு |
| தானியக் குருணை | —30 பங்கு |
| கடலைப் பிண்ணாக்கு | — 5 பங்கு |
| மீன் தூள் | — 5 பங்கு |
| தாது உப்புக் கலவை | —1 பங்கு |

இதில் 2 கிலோ வரை கொடுக்கலாம்.

**குதிரைகளுக்கு உணவிடுதல் :**

சாதாரணமாக, குதிரைகள் வண்டி இழுப்பது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால் அவைகளுக்கு, சக்தி மிக்க ஆகாரம் தேவை.

கொள்ளு—2 கிலோ
தவிடு—0.5 கிலோ
புல்—10 கிலோ
இத்துடன் 2 அவுன்ஸ் உப்பு அவசியம்.

இந்த உணவு வகைகளைக் கடைப் பிடித்தால் கால்நடைகள், நல்ல வளர்ச்சி பெற்று, மனித சமுதாயத்துக்கு மிகவும் பயன் படும் என்பது உறுதி.



# மாவட்டங்களிலிருந்து....

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டபின் தமிழகத்தில் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதில் புதிய வேகம் பிறந்துள்ளது! இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ், சேலம், தருமபுரி, மதுரை, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், தென்னார்க்காடு ஆகிய ஆறு மாவட்டங்களில் அரிய சாதனைகள் ஏற்பட்டுள்ளன. அச்சாதனைகள் அனைத்தையும் விரிக்கின் பெருகும் என்றஞ்சி, அவைகளில் ஒருசில மட்டும் ஈண்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

## தருமபுரி மாவட்டம்

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் தருமபுரிமாவட்டத்தைப்பொறுத்தவரையில், கடந்த 6 மாதத்திற்குமுன் ஏழை எளிய மக்கள் நெருங்கிப் பார்க்க முடியாமல் இருந்த உணவுப் பண்டங்கள் விலை கணிசமான அளவு குறைக்கப்பட்டும், தரம் குறையாமலும் வழங்கப்படுகின்றன.

குறிப்பாகச், சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் 320 ரூபாய் முதல் 350 ரூபாய் வரை விற்ற 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை சன்னரக கிச்சடி அரிசி, தற்போது ரூபாய் 150 முதல் ரூபாய் 160 வரையிலும், சென்ற ஆண்டு 120 ரூபாய் முதல் 125 ரூபாய் வரை விற்ற 17.5 லிட்டர் கொண்ட கடலை எண்ணெய் டின் தற்போது 70 ரூபாய் முதல் 72 வரை விற்கப்படுகிறது.

பொதுமக்களுக்கு உணவு விடுதிகளின் மூலம் ஒரு ரூபாய்க்குத் தரமான சாப்பாடு கிடைக்கிறது.

சென்ற நான்கு மாத காலத்தில் இம்மாவட்டத்தில் நிலமற்ற ஏழைகள் 364 பேருக்கு 924 ஏக்கர் நிலப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

தாழ்ந்த நிலையில் உள்ள ஏழை எளியவர்களுக்கு, குடியிருக்க, கடந்த நான்கு மாதத்தில் மட்டும் இம்மாவட்டத்தில் 3,500 பேருக்கும், ஓசூர் கோட்டத்தில் 1,500பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

சித்தேரி, முக்கனூர், கொடகரை, தொட்டமஞ்சி ஆகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்து வரும் மலைவாசிகளுக்காக தமிழ்நாடு அரசு 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் திட்டமொன்றைத் தயாரித்திருக்கிறது.



பணம் கொடுத்துப் புத்தகம் வாங்கிப் படிக்க இயலாத ஏழை எளிய மாணவ மாணவிகள் பயன் பெறத்தக்க வகையில் 1,500 பள்ளிகளில் புத்தக வங்கிகள் துவக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள குறைந்த கால கடனை, நீண்டகால கடனாக மாற்றவும், தனியார் கடன் பிடியிலிருந்து ஏழை எளிய மக்களை மீட்கவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

தொட்டப்பட்டி என்ற இடத்தில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இன்டஸ்ட்டிரியல் ஆல்கஹால் என்ற எரிசாராயம் செய்யும் தொழிற்சாலை கட்டுவதற்காக 30 ஏக்கர் நிலத்தை அண்மையில் அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.

இம்மாவட்டத்தில் 87 நிரந்தரக் குடிதண்ணீர் திட்டத்திற்காக 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 53 துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 7.5 இலட்சம் ரூபாயும், கிராமப் புறச்சாலை வசதித்திட்டத்திற்காக இரண்டு லட்சத்து 43 ஆயிரத்து 400 ரூபாயும் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

சென்ற மே மாதம் 20-ந் தேதி முதல் 30ந் தேதி வரை தமிழக அரசால் நடத்தப்பட்ட இலவச கண்சிகிச்சை முகாம் மூலம், தருமபுரி கோட்டத்தில் 424 பேருக்கும் ஓசூர் கோட்டத்தில் 341 பேருக்கும் இலவச அறுவைச் சிகிச்சை செய்து, கண்ணாடிகள் வழங்கப்பட்டன. மேலும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது.


மத்திய அரசுத் திட்டப்படி மகளிர் நலத்துறை, 'கேர்' நிறுவனம், 'யூனிசெப்' ஒருங்கிணைந்த குழந்தைகள் நல்வாழ்வுத் திட்டம், இம்மாவட்டத்தில் தனி ஒன்றியத்தில் 50 இடங்களில் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் முதல் அமல்படுத்தப்படுவதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

## சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் பல்வேறு துறைகளிலும் 20 அம்சத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. நாமகிரிப் பேட்டையில் கைத்தறி நெசவாளர்களுக்கும், சிறுதொழில் செய்வோருக்கும் யுனைடெட் கமர்ஷியல் பாங்கு 57 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. செவ்வாய்ப் பேட்டையில் உள்ள பஞ்சாப் நேஷனல் பாங்கு, கைத்தறி நெசவாளர்களுக்குக் கடன் தொகை அளித்துள்ளது. சேலத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு இருபது ஏழைகளுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் கறவை மாடு வாங்கிக் கொள்ளக் கடன் உதவி வழங்கியுள்ளது.

நெருக்கடி நிலை அமல் செய்யப்பட்ட பின், சேலம் மாவட்டத்திலும் அத்தியாவசியப் பண்டங்களின் விலை கணிசமாகக் குறைந்திருக்கிறது. எந்தப் பொருளுக்கும் தட்டுப்பாடும் இல்லை. ஓட்டல்களிலும் உணவுப் பண்டங்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் எல்லா ஓட்டல்களிலும் ஜனதா சாப்பாடு போடப்படுகிறது. அரசு நிர்ணயித்த எடை, விலை ஆகியவை ஓட்டல்களில் அமல் படுத்தப்படுகிறதா என்பதைத் திடீர் சோதனைகள் மூலம் அலுவலர்கள் அவ்வப்போது கண்காணித்து வருகிறார்கள்.

கிராமப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் உள்ள ஏழை மக்களுக்கு மலிவு விலையில் துணி விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மலிவு விலைத் துணிகள் மொத்த அளவில் விற்பனை செய்யப்படுகின்றன. நகரப் பகுதிகளில் 19 சங்கங்களும், கிராமப் பகுதிகளில் 210 சங்கங்களும் இவற்றை விற்பனை செய்கின்றன. கடந்த மாதம் 86 பேல் துணி விற்பனைக்காக எடுக்கப்பட்டது.




வறட்சி நிலைமையையொட்டி சேலம் மாவட்டத்தில் மொத்தம் 114 கிராமங்களில் போதிய அளவு பயிர் விளையாத விவசாயிகளின் நிலங்களுக்கு அரசாங்கக் கடன் வசூல், கூட்டுறவுக் கடன் வசூல் ஆகியவை தள்ளி வைக்கப்பட்டுள்ளன. தலைவாசல், கெங்கவல்லி, வீரகனூர் வட்டங்களில் உள்ள 40 கிராமங்களில் 25 சதவிகிதத்தைவிடக் குறைவான மகசூல் உள்ள நிலங்களுக்கு நில வரி ரத்து செய்யப்படும் எனத் தெரிகிறது.

மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி போன்றவற்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான தயாரிப்புக்கு உற்பத்தி வரியிலிருந்து விலக்கு அளித்தும், விசைத்தறி மூலம் தயாரிக்கும் உயர்த்த ரகத் துணிகளுக்கான வரி 14 சதவிகிதத்திலிருந்து 12 சத விகிதமாகக் குறைத்தும், மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் சமீபத்தில் அறிவித்தது, ஜவ்வரிசித் தொழிற்சாலைகளும் விசைத்தறித் தொழிற்சாலைகளும் நிறைந்த இந்த மாவட்டத்திற்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

## மதுரை மாவட்டம்

குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்பட்டபின், மதுரை மாவட்டத்தில் 352 பேருக்கு நிலப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சுமார் 116 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள 255 உயர்நிலைப் பள்ளிகளில் 148 பள்ளிகளில் புத்தக வங்கிகள் தொடங்கப் பட்டிருக்கின்றன. மேலூர், கொட்டாம்பட்டி, நத்தம் ஊராட்சி ஒன்றியங்களில் விவசாயிகள் செயல்முறை விளக்க நூலகக் கேந்திரங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் வட்டம் சாணார்பட்டி வட்டாரத்தில் உள்ள மூன்று பூதான கிராமங்களை இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் கிராமங்களின் தேவைகளை, பாங்க் பூர்த்தி செய்யும். எல்லைப்பட்டி, மார்க்கம்பட்டி, கொத்தப் புலிப்பட்டி கிராம மக்களுக்கு விவசாயம் செய்யவும், ஆடு, மாடுகள் வாங்கவும், இந்தப் பாங்க் உதவும்.

மதுரை மாவட்டத்தில் வருவாய்த்துறை அலுவலர்கள் ஓட்டல்களில் அடிக்கடி திடீர் சோதனை செய்து வருவதன் பயனாக, உணவுப்பண்டங்களின் தரமும், எடையும் சீராக இருக்கின்றன.

மதுரையில் விஞ்ஞான மியூசியம் ஒன்றைத் தொடங்கவும், தமிழர் பழங்காலப் பொருட்கள் பார்வை அறை ஒன்றைத் தொடங்கவும், மதுரைப் பல்கலைக் கழகம் திட்டமிட்டிருக்கிறது.




நடப்பு நிதியாண்டில் கிராமக் குடிநீர் வசதிக்காக இம்மாவட்டத்திற்குப் பத்தொன்பது இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வேலைவாய்ப்பற்றவர்கள் சுயமாகத் தொழில் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு நிறுவனம் புதிய திட்டமொன்றைத் துவக்கியிருக்கிறது. தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகள் ஆதரவில் சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள் பற்றி விவரிக்க, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதே இந்தத் திட்டம், இதனால், வேலை வாய்ப்பற்றவர்கள் பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

## புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அண்மையில் ஏழைச் சலவைத் தொழிலாளர்கள் 82 பேருக்கு சலவைப் பெட்டிகளும், முடி திருத்துவோர் 85 பேருக்குத் தொழிற்கருவிகளும், தச்சுத் தொழிலாளர்கள் இரண்டு பேருக்குத் தொழிற்கருவிகளும், மற்றும் தையல் மிஷின், கொல்லுத் தொழிற் கருவிகளும் இலவசமாக வழங்கப்பட்டன.



இம்மாவட்டத்தில் 7.5 இலட்சம் ரூபாய் செலவில் சாலைத் திட்டங்கள் மேற் கொள்ளப்படவிருக்கின்றன. இம்மாவட்டத்தில் 150 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இங்கு புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் உடனடியாகத் துவக்கப்படும்.

வறட்சிப் பகுதிகளில் 20 குடிநீர்க்கிணறுகளை ஆழப்படுத்த உடனடி உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் 80 கிணறுகளை ஆழப்படுத்த அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இங்கு பஞ்சாப் போன்று ஏரியுடன் குளங்கள் அமைக்க ஏற்பாடு செய்யவிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் 3,000 நிலப்பட்டாக்கள்தான் வழங்கப்பட்டன. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 9,000 நிலப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

சிறியலூர் கிராமத்தில் பாட்டன்பட்ட கடனுக்காக கொத்தடிமையாய் இருந்த துரைராஜ் என்கிற பதினைந்து வயதுப் பையன் விடுவிக்கப்பட்டான். அவனது பாட்டனாரால் பறி கொடுக்கப்பட்ட 56 சென்ட் புஞ்செய் நிலமும் மீட்கப்பட்டு, நன்கொடையாக அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

## கோவை மாவட்டம்

நெருக்கடி நிலைப்பிரகடனத்தாலும், இருபது அம்சத் திட்டத்தாலும் நாடுபெற்ற நலன்களையும் கோயம்புத்தூர் மாவட்டமும் கணிசமாக அனுபவிக்கிறது. இம்மாவட்டம் தொழில்வளம் பெற்ற மாவட்டம். அரசியல் சலனங்கள் அலைவீசும் மாவட்டம். கடந்த நான்கு மாதங்களாக இம்மாவட்டத்தில் நிலவும் அமைதியும் கட்டுப்பாடான ஒழுங்கான வாழ்க்கையும் இதற்கு முன் எப்போதுமே கற்பனையிலும் காணப்பட்டிராத ஒன்றாகும். மேலும் உணவுப் பொருள்கள் மலிவாக, தாராளமாகக் கிடைக்கின்றன.



தென்னிந்திய மில்லதிபர்கள் சங்கத்தின் தலைமை அலுவலகம் கோவையில் இருக்கிறது. இந்தச் சங்கம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பஞ்சு உற்பத்தியை இரு மடங்கு ஆக்கத் திட்டம் ஒன்றை வகுத்திருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், நடுத்தர, நீண்ட இழைப்பஞ்சு தரும் பருத்தியில் தரமான ரகங்களைச் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கம் தரப்படும். இத்திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்குத் தரமான நல்ல விதைகளை மில்லதிபர்கள் சங்கமே விநியோகிக்கும்.

### கொத்தடிமைக்கு விடுதலை

கடந்த நான்கு மாதங்களுக்குள் மாவட்ட அலுவலர்களின் முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாக, இம்மாவட்டத்தில் ஜூன் 23 வரை 440 கொத்தடிமைகள் விடுதலை அடைந்திருக்கிறார்கள். சத்தியமங்கலம் வட்டத்தில் இந்தக் கொத்தடிமைகள் இருந்து வந்திருக்கிறார்கள். விடுதலை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியும் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 800 ஏக்கர் நிலம், ஒவ்வொருவருக்கும் மூன்று ஏக்கர் வீதம் பலருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்க் ஒன்றும் இவர்களுக்குக் கடன் உதவிகள் தர முன் வந்திருக்கிறது.


இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றும்போது, கூடவே, வேறு திட்டங்களைச் சேர்த்து தீவிரமாக நிறைவேற்ற வேண்டும் என்று, பிரதமர் கூறியிருப்பது நினைவிருக்கலாம். கோவை நகரில் உள்ள வட்டமேஜை நிறுவனங்கள், மாதர் வட்டங்கள் ஆகியவற்றுடன் இணைந்து கோவை நகராட்சி ஒரு சிறப்பு குடும்பக் கட்டுப்பாடுத் திட்ட இயக்கத்தை சென்ற மார்ச் மாதத்தில் தொடங்கி, அண்மையில் முடித்திருக்கிறது. இந்த 82 நாட்களில் 1250 ஆண்களுக்கும் 120 பெண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் 800 பேர் ஆலைத் தொழிலாளர்கள், 450 பேர் சேரிவாசிகள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

'ஜனதா' சாப்பாடு மலிவான விலையில் வயிற்றுக்குப் போதிய உணவாக மட்டும் இருந்தால் போதுமா? அது சத்துள்ள உணவாகவும் இருக்க வேண்டும் அல்லவா? அவ்வாறு மலிவான விலையில் தரமானதாகவும் சத்தானதாகவும் மக்களுக்கு உணவு அளிப்பது எப்படி என்று முன்னுதாரணம் காட்டும் முறையில், கோவை அவினாசிலிங்கம் பெண்கள் மனையியற் கல்லூரி, கோவைமாவட்டத்தில் போக்குவரத்துகளுக்கு இருதயம் போன்ற கோவை மத்திய பஸ் நிலையத்தில் ஓர் உணவகத்தைத் திறந்து நடத்துகிறது. இங்கு வழங்கப்படும் உணவு வெறும் ஜனதா உணவல்ல; சரிவிகித ஜனதா சத்துணவு.

வசதிக்குறைவாலோ, வேறு காரணங்களாலோ படிப்பை பாதியில் விட்ட கிராமத்துச் சிறுவர்களுக்கு இங்கே வேலை தரப்படுகிறது. வேலை நேரத்திற்குப் பிறகு கல்வி அறிவும் போதிக்கப்படுகிறது.

## தென்னார்க்காடு மாவட்டம்

தென்னார்க்காடு மாவட்டம் இருபது அம்சத் திட்டத்தின்கீழ் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அரசு நடவடிக்கைகள் காரணமாக விலைவாசி குறைந்த நிலையில் நீடிக்கிறது. இம்மாவட்டத்தில் உபரி நிலமாகக்கிடைத்ததில் 276 ஏக்கர் நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி முதல் இன்றுவரை 619 வீட்டுமனைப் பட்டாக்களும், 100 நிலமற்றவர்களுக்கு சுமார் 118 ஏக்கர் நிலத்திற்குரிய பட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளன. அரிசன நலத்துறையினரால் 4,107 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.



இம்மாவட்டத்தில் 542 கொத்தடிமைகள் விடுதலை செய்யப்யப்பட்டு உள்ளனர். இவர்களில் 17 பெண்களும், 39 சிறுவர்களும் உள்ளனர். சிறுவர்கள் படிக்க வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்கள். ஒரு சிறுவனது படிப்பின் பொறுப்பை திருக்கோயிலூர் அரிமா சங்கத்தினர் ஏற்று உள்ளனர். மற்ற சிறுவர்கள், அரசு விடுதிகளில் தங்கிப் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

விடுதலை பெற்ற கொத்தடிமைகளில் 98 பேருக்கு மறுவாழ்விற்கான வகைகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் 40 பேரை சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின் கீழ் ஏற்று, அவர்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலம் உதவிகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றியமையாப் பண்டங்கள் குறைந்த விலையில் கிராமப்புற மக்களுக்குக் கிடைப்பதற்காக கள்ளக்குறிச்சி பகுதியில் 20 கிராம கூட்டுறவு மையங்கள் மூலம் விற்பனை செய்ய மாவட்டக்

# விவசாயிகள் சேவையில் வளர்ந்துவரும் ஒரு கூட்டுறவு!

BASF

SHAW WALLACE

பி ஏ எஸ் எஃப் -ஷா வாலஸ் கூட்டுறவு, விவசாயத் துறையில் தன்னிறைவு பெறுவதற்கு நம்நாடு எடுக்கும் முயற்சிகளுக்கு ஒரு புதிய பரிமாணம் கொடுக்கும் — விளைச்சல் அதிகரிக்கவும், விரயத்தைக் குறைக்கவும் உதவும் புதிய வகை பயிர் பாதுகாப்பு மருந்துகள் மூலம்.

**பி ஏ எஸ் எ:ப் தயாரிப்பு வகை:**

**பாவிஸ்டின்— ஊடுருவிச் செயலாற்றும் பூசணக் கொல்லி**—50க்கும் அதிகமான பயிர்களில் 150க்கும் மேலான நோய்களை தடுக்கிறது மற்றும் குணப்படுத்துகிறது. சிறிதளவே போதும், சிறந்த பயனளிக்க.

**பாஸாலின் — பகுத்துச் செயலாற்றும் களைக்கொல்லி**— களைகள் முளைத்தவுடனேயே அவற்றை அழிக்கிறது; விலையுயர்ந்த உரத்தை மீதப்படுத்துகிறது; 30—50% அதிக மகசூல் பெற உதவுகிறது.

**லிஹோஸின்—பயிர்வளர்ச்சி சீரணி**— தேவையற்ற தாவரப் பொருள் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது; வறட்சி நிலையிலும் பயிர் செழித்துவளர உதவுகிறது; பயிர் விரைவாகவும், ஒரேசீராகவும் முதிர்ச்சிபெறச் செய்து, மகசூலையும் அதிகரிக்கிறது.

பி ஏ எஸ் எஃப்-பின் அகில உலக ஆராய்ச்சியின் விளைவுகளான இத்தயாரிப்புகள், ஷா வாலஸ் நிறுவனத்தின் விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் மூலம் நாடெங்கும் கிடைக்கும்.

இந்த பி ஏ எஸ் எஃப் -ஷா வாலஸ் கூட்டுறவு, உலகெங்கிலும் உற்பத்தித் திறனை அதிகரித்து வரும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை இந்திய விவசாயிகளுக்குக் கிடைக்கச்செய்யும்.

## பி ஏ எஸ் எ:ப், ஷா வாலஸ் இருவரும் சேர்ந்து புதியவகை பயிர் பாதுகாப்பு மருந்துகளை இந்திய விவசாயிகளுக்கு அளிக்கின்றனர்

கூட்டுறவு விற்பனைக் கழகம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

அரிசன நலத்துறை 27,273 மாணவர்கள் பயனுற 68,385 பாடப் புத்தகங்களையும், 43,239 நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கியுள்ளது.

இருபது அம்சத் திட்ட நிறைவேற்றத்தின் பயனாக, தென்னார்க்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம், ஒரு லட்சத்து 3 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இன்றியமையாப் பண்டங்களை மாணவர் விடுதிகளுக்கு வழங்கியுள்ளது. 156 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 35 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 16 இலட்சத்து 27 ஆயிரம் மீட்டர் தரமான துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 134 கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 4 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்பட்டுள்ளன.

(நன்றி:
சென்னை வானொலி நிலையம்.)

# உடல் ஊனமுற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம்

உடல் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு சுயசேவை நிறுவனங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்க மத்திய அரசின் சமூக நல்லாழ்வுத் துறை முடிவு செய்துள்ளது. மொத்தச் செலவினத்தில் 90 சதவிகிதம் இத்தகைய நிறுவனங்களுக்கு மானியமாக அளிக்கப்படும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக, மேலும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உடல் ஊனமுற்றவர்களுக்கு இந்த உபகாரச் சம்பளம் 9-ஆம் வகுப்பு முதல் அளிக்கப்படும். மேலும் தொழில் நுட்பத் துறையில் 'டிப்ளமா' அல்லது பட்டப்படிப்பு வகுப்புக்கும் இந்த உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

அஞ்சல்வழிக் கல்வி பயிலும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் இனி உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலோ அல்லது வர்த்தக நிறுவனங்களிலோ 14 வயதிலிருந்து 40 வயது வரம்பிலுள்ள தொழில் பயிலுனர்களாகப் பணி புரியும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் உபகாரச் சம்பளம் வழங்கும் புதிய முறையொன்று கொண்டு வரப்பட்டுள்ளது. ஆராய்ச்சி வகுப்புகளில் உள்ள மாணவர்களுக்கும் தற்போது உபகாரச் சம்பளம் கிடைக்கிறது. உபகாரச் சம்பளம் வழங்கும் திட்டங்களின் மூலம் 6,250-க்கும் அதிகமான உடல் ஊனமுற்றவர்கள் பயனடைவார்கள்.

## கோவை மாவட்டத்தில் வேலை வாய்ப்பளிக்கும் வறட்சி நிவாரணத் திட்டங்கள்!

கோயம்புத்தூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலைத் திட்டத்தின்கீழ், வேலை வாய்ப்பளிக்கும திட்ட முன்னேற்றம் பற்றி தமிழ்நாடு அரசு பரிசீலனை செய்தது. அதன் காரணமாக இம்மாவட்டத்தின் வறட்சிப் பகுதிகளில் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க தீர்மானித்துள்ளது.

இதையொட்டி கோவை மாவட்டத்தில் ரூ. 7 இலட்சம் செலவில் விரைவாக நடக்க வேண்டிய சிறு பாசனத் திட்டம், சிறப்புச்சிறு பாசனத் திட்டங்கள் ஆகியவை துவக்கப்படும் வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதன அவசியத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் 30 9-'76-க்குள் முடிக்கக கூடிய பணியினை மட்டும் உடனடியாக மேற் கொள்வார்

இதைத் தவிர ரூ. 17.85 இலட்சம் செலவில் 25 புதிய சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கோவை மாவட்டத்தில் ரூ. 6.93 இலட்சம் செலவில் குறிப்பிட்ட 13 மித வெப்பச சாலைகளை அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதுடன், வேலை வாய்ப்பு அளிக்க கோவை மாவட்டத்தில் மேலும் ரூ. 3 இலட்சம் செலவில் புதிய மித வெப்பச் சாலைகளை அமைக்கும் பணியையும் அரசு மேற்கொண்டுள்ளது.

# காய்கறி விதைகள்!

## ஒரு ரூபாய்க்கு 11 ரகம்!!

''ஆடிப்பட்டம் தேடி விதை'' என்ற பழமொழியை யொட்டி சென்னை நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், மாவட்டங்களிலும் காய்கறிகளைப் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. இம்முயற்சியின் முதற்படியாக சென்னை நகரில் ஒரு ரூபாய்க்கு 11 வகைக் காய்கறி விதைகளைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

''சென்னை நகரில், உள்ள ஒவ்வொரு பால் விநியோக நிலையத்திலும் ஆகஸ்டு 2-ந் தேதியிலிருந்து இந்த விதைகள் விற்பனை செய்யப்படும். மொத்தம் 2 டன் விதைகள் ஒன்றரை இலட்சம் 'பாக்கெட்டு'களில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

''மேலும் விவரங்கள் வேண்டுவோர், உரம், நாற்றுக்கள் தேவைப்படுவோர் சென்னை நகரில் அண்ணாநகர் 534-15 கட்டடத்திலும், தேனாம்பேட்டை எல்டாம்ஸ் ரோடு 4-31 எண் கட்டடத்திலும் தொடர்பு கொள்ளலாம். இந்த அலுவலகங்கள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 2 மணியிலிருந்து இரவு 7-30 மணிவரை திறந்திருக்கும். நகரிலுள்ள பள்ளிக்கூடங்கள் கல்லூரிகளிலும் காய்கறித் தோட்டங்களை அமைக்க ஏற்பாடு செய்யப்படும்'' என்று வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. எ. வெங்கடராமன் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார்.

**மா**வட்டங்களில் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளிலும் காய்கறி விதைகள் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, காய்கறி விதை வேண்டுவோர் உடன் மேற்கூறிய இடங்களில் இருந்து காய்கறி விதைகளை வாங்கி ஆடிப்பட்டத்திலேயே பயிரிட்டுப் பயனடையலாம்!


**TNPSC** Advt. No. 24

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு

கீழ்க்குறித்த பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**55 உதவியாளர்கள்** — கருவூலம் மற்றும் கணக்குத் துறையில், தமிழ்நாடு அரசு அலுவலகப் பணியாளர் தொகுதியில்.

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினர்கள் .. | 10 |
| பிற்பட்ட வகுப்பினர்கள் .. | 18 |
| பகிரங்கப் போட்டி .. | 27 |

**சம்பளம் :** மாதத்திற்கு ரூபாய் 250—10—330—15—450 (வரையறுக்கப்பட்ட பயிற்சி அல்லது போதனைக் காலத்தில் மாதத்திற்கு ரூபாய் 240 மட்டும் வழங்கப்படும்)

**வயது :** பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் வயது வரம்பு இல்லை. மற்ற வகுப்பினர்களுக்கு 1—7—76-ல் 26 வயது முடிந்திருக்கக் கூடாது.

**கல்வித் தகுதி :** மானியம் வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட எந்தப் பல்கலைக் கழகத்தையும் அல்லது நிறுவனத்தையும் சார்ந்த 'பி.ஏ'., 'பி. எஸ்சி'., 'பி. காம்'., அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 'பி.ஓ.எல்'., பட்டம்.

வணிக இயலில் பட்டம் பெற்றுள்ள மனுதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.


படைக்கலைப்பின் காரணமாக வேலையிழந்த படைவீரர்களுக்கும், இலங்கை, பர்மா, அகதிகளுக்கும் வயது வரம்பிலும், கல்வித் தகுதியிலும் சில சலுகைகள் வழங்கப்படும்.

**கடைசி நாள் :** 2—9—1976 மாலை 5.00 மணி

விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் பெற சுயவிலாசமிட்ட போதிய அஞ்சல் தலை (ரூபாய் 1.00) ஒட்டிய, உறை (23 செ. மீ. நீளமுள்ளது) இணைத்து, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வு ஆணைக்குழு, அரசினர் தோட்டம், சென்னை—600 002 அவர்களுக்கு எழுதிக் கேட்கவும்.


**தமிழ்நாடு அரசுப்பணியாளர், தேர்வு ஆணைக்குழு.**

DIPR/34715/76



ஆடுதுறை-31

# காவிரிப் பாசன உழவர் பெருமக்களுக்குக் காலத்திற்கு ஏற்ற சில யோசனைகள்!



சுருட்டுப் பாய் நாற்றங்கால்

குறுவைச் சாகுபடிக்கு மேட்டூரிலிருந்து தண்ணீரைத் திறந்து விடுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதிக அளவுக்கு பயிர்ப் பாதிப்பு ஏற்படாமலிருக்க, பின்கண்ட சில யோசனைகளை வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. அ. வேங்கடராமன் அவர்கள் வெளியிட்டார்.

1. 'ஏ.டி.டி. 31', 'கோ. 32' ஆகிய இரண்டு வகையான நெல் விதைகளை இந்தச் சூழ்நிலையில் சாகுபடி செய்வது சிறந்தது. எக்காரணம் கொண்டும் 'ஏ.டி.டி. 27' ஐ விதைக்க வேண்டாம்.

2. தண்ணீரை மிதமாகப் பகிர்ந்து முறையாகப் பராமரிக்க வேண்டும்.

3. 25 அல்லது 30 நாட்களுக்கு முன்பு விதை விதைக்கப்பட்டிருந்தால், அதைப் பிடுங்கி விட்டுப் புதிதாக விதைப்பதே சாலச் சிறந்தது.

4. சுருட்டுப் பாய் நாற்றங்கால் முறை சிறந்தது.

7. நெருக்கிப் பயிரிடுவதும் உத்தமமானது. ஒரு சதுர மீட்டருக்கு 66 குத்து வீதம் பயிரிடுவது சிறந்தது.

6. பூச்சி மருந்து தெளிப்பு போன்ற பணிகளுக்காக 9 அங்குலம் முதல் ஒரு அடி வரை இடை இடையே பாதை விடுவது நல்லது.


## போதுமக்களின் குறைகளைத் தீர்க்க தமிழ்நாடு அரசின் நடவடிக்கை

அதிகாரங்களைத் தவறாகப் பயன் படுத்துதல் மற்றும் அரசின் கீழ் மட்டத்தில் உள்ள அலுவலர்களின் தவறான நடவடிக்கை ஆகியவற்றை விரைவான முறையில் ஆய்வு செய்வதுடன், தவறு செய்த அலுவலர்களின் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

குறைகளைப் பற்றிய மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் தகுந்த கவனத்துடனும், அனுதாபத்துடனும், விரைவாகவும் செயலாற்றவேண்டும் என்றும், சமுதாயத்தின் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஒரு கருத்தினை உருவாக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. இக்குறிக்கோளோடு வருவாய்த்துறை உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோர் கிராமப்பகுதிகளில்-வட்டம் மற்றும் வட்டார அளவில் —சுற்றுப்பயணம் செய்தல் வேண்டும் என அரசு முடிவு செய்துள்ளது.

அரசின் உயர் அலுவலர்கள், ஏழை எளிய மக்களுக்குப் பணிபுரிய எப்பொழுதும் தயாராயிருப்பதுடன் தங்களின் கீழ் பணிபுரிபவர்கள் எவ்வாறு இப்பணியைச் செய்கிறார்கள் என்பதைக் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும். மேலும் தேவையான பொழுது, தகுந்த முறையில் அவர்களின் பணியைத் தீவிரம் ஆக்க வழிவகைகள் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

## விடைகள்



1. இவ்வாண்டு ஜூலை 22 முதல் (அமிர்தசரஸ்—லாகூர் எக்ஸ்பிரஸ்).
2. 'வைகிங்-1'.
3. கனடாவிலுள்ள மாண்ட்ரீல் நகரில், 17.7.76 முதல் 1—8—76 வரை.
4. சர். ஏ. இராமசாமி முதலியார் அவர்கள்.
5. திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்கள்.
6. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்.
7. 12.3.1954 முதல்.
8. பேடன் பவல் பிரபு (**Lord Baden—Powell**) என்பவரால் 1908-ஆம் ஆண்டில்.
9. அ. சர்வதேசத் தொழிலாளர் நல நிறுவனம்.
   ஆ. உணவு வேளாண்மை நிறுவனம்.
   இ. சர்வதேச வளர்ச்சிச் சங்கம்.
   ஈ. சர்வதேசத் தொலைத் தகவல் யூனியன்.
10. இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் உள்ளது; இல்லை.


**தொகுப்பு: பி. வி. கிரி**

# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்!
# நியாயமான விலைகள்!




கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,
## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்
## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!




கோ-ஆப்டெக்ஸ்
## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்
## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!




மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப் பூச்சி

 பதிவு எண். M. 8676



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத்திட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.